Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை (27.07.2014) பக்கங்கள் 20 ஓசை –299

## கொழும்பு சென்ற ஊடகவியலாளருக்கு இடையூறு வழங்கவில்லை இராணுவம்



**வணிகசூரிய தெரிவிப்பு**

(கொழும்பு)

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக வடக்கிலிருந்து வருகைதந்த ஊடகவியலாளர் குழுவுக்கு இராணுவத்தினர் ஓமந்தையில் வைத்து எவ்விதமான இடையூறுகளையும் விளைவிக்கவில்லை என்று இராணுவப்பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மைய பணிப்பாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு வன்னி எம்.பிக்களுக்கு தொலைபேசி வசதிகள் எதற்கு?

**கேள்வியெழுப்பும் யாழ்., வன்னி ஊடகவியலாளர்கள்**

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொலைபேசி எதற்கு வழங்கப்பட்டுள்ளது என யாழ், வன்னி ஊடகவியலாளர்கள் கேள்விஎழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் கருத்துத் தெரிவித்த போது,

கொழும்பில் உள்ள ஊடக பயிற்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக யாழில் இருந்து 15 ஊடகவியலாளர்கள் இரண்டு வாகனங்களில் சென்றவேளை எமது வாகனத்தில் கஞ்சா இருப்பதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் பொலிஸார் எம்மை கைது செய்தனர்.

இரவு 10.00 மணியளவில் பொலிஸிலிருந்து விடுபடுவதற்காக எமது வவுனியா சக ஊடகவியலாளர்களும், சம்பவ இடத்திற்கு வருகை தந்து இரவு இரவாக எமக்காக குரல் கொடுத்தார்கள்.

ஆனால் நாம் தொடர்பு கொண்டவர்களில் முக்கியமாக கூட்டமைப்பின் வன்னி (வவுனியா)

19 ஆம் பக்கம் பார்க்க

## ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படவில்லை

**பொலிஸ் தெரிவிப்பு**

(கொழும்பு)

ஓமந்தை பிரதேசத்தில் வைத்து எந்த ஒரு ஊடகவியலாளரும் கைதுசெய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

சுதந்திர ஊடக இயக்கம் கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்த செயலமர்வு ஒன்றில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த ஊடகவியலாளர் குழு ஒன்று கைது செய்யப்பட்டதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## பளை வந்த ரயிலில் பயணித்தவர் மரணம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பளை நோக்கிப் பயணித்த ரயிலில் இருந்து தவறிவீழ்ந்து இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அநுராதபுரம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து பாலமொன்றின் மீது மோதுண்டு இளைஞன் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனைப் பகுதியிலுள்ள உறவினர் வீடொன்றிற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியா செல்வதற்காக விசா அனுமதி கோரவில்லை

## கூறுகிறது ஐ.நா. விசாரணைக்குழு

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்காக இந்தியா செல்வதற்கு விசா எதுவும் கோரவில்லையென ஐ.நா.வின் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

குறித்த விசாரணைகளை மேற்கொள்ள இந்தியா விசா வழங்க மறுத்ததாக வெளியான தகவல்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய ஐககிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினருக்கு இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட மாட்டாது என இதுவரை இலங்கை அரசு கூறிவருகின்றது.

இதனால் மூன்று நாடுகளில் விசாரணைகளை மேற்கொள்ள இவர்கள் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் சர்வதேச விசாரணைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீது குற்றம் சுமத்தினேனா? செய்தியை மறுக்கும் டெஸ்மன் சில்வா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளே போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று தான் உரையாற்றியதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியான செய்தியை, சர்வதேச சட்ட நிபுணர் சேர் டெஸ்மன் டி சில்வா நிராகரித்துள்ளார்.

காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கான, மூன்று பேர் கொண்ட சர்வதேச சட்ட நிபுணர் குழுவின் தலைவராக டெஸ்மன் டி சில்வா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தினால் 2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போர் அனுபவக் கருத்தரங்கில்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி பொதுவேட்பாளராக ஷிராணியின் பெயர் பரிந்துரை?

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கோட்டே நாகவிகாராதிபதி வண. மாதுளுவாவே சோபித தேரரின் தலைமையில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் இந்த அழைப்பு விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை புகலிடதாரிகளை கடலில் தடுத்தது சரியானதே

**என்கிறார் ஆஸி. பிரதமர்**



இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் கடலில் தடுத்து வைக்கப்பட்டமை சரியானதே என அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அப்போட் தெரிவித்துள்ளார். அண்மையில் அவுஸ்ரேலியா நோக்கிப் பயணித்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் 157 பேரை, அந்நாட்டு அதிகாரிகள் கடலிலேயே தடுத்து வைத்திருந்தனர்.

சட்டவிரோத

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது ஐ.நா.; குற்றஞ்சாட்டுகிறது அரசாங்கம்

(கொழும்பு)

சமாதானம், நாடுகளுக்கிடையிலான ஒற்றுமை என்பவற்றை கட்டிக்காக்க வேண்டியதே ஐ.நா.வின் கடமையாகும். ஆனால் ஐ.நா. தற்போது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. அதன் நாடுகள் குறித்த அணுகுமுறை குறித்து சர்வதேச சமூகம் ஆழமாகச் சிந்திக்க வேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இடம்பெறும் தாக்குதலால் குழந்தைகளும் பெண்களும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நிலைமை தற்போது

19 ஆம் பக்கம் பார்க்க

விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர் பாதுகாப்பாளர் பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசிய மில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3746)





மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் நேற்று இடம் பெற்றது. கீரிமலை கடற்கரையில் தீர்த்தம் ஆடுவதற்காக சுவாமி எழுந்தருளியிருப்பதையும், தீர்த்தம் ஆடுவதையும் காணலாம்.

# வவுனியாவில் குடிநீர்த் தட்டுப்பாடு; நிவர்த்தி செய்ய நிதியுதவி

வவுனியா மாவட்டத்தில் நிலவிவரும் கடும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்தட்டுப்பாட்டை உடனடியாக தீர்க்கும் வகையில் 4 பிரதேச செயலகங்களுக்கும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஒதுக்கபட்டுள்ளதாக வட மாகாண ஆளுநரின் பிராந்திய இணைப்பாளரும் வர்த்தக கைத்தொழில் அமைசசரின் இணைப்பு செயலாளருமான ஐ.எஸ்.எம். முகைதீன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று இடம்பெற்ற வறட்சி நிலை தொடர்பான விசேட கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வர்த்தக கைத்தொழில் அமைசசர் ரிசாட் பதியுதீனின் பணிப்புரைக்கமையவே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குடிநீர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வவுனியாவில் உள்ள நான்கு பிரதேச செயலகங்களிலும் குடிநீர் பிரச்சினை உள்ளமையினால் உடனடியாக அவற்றை தீர்க்க வேண்டிய சூழல் உள்ளமை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எனவே உடனடியாக குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ள கிராமங்களை இனம் கண்டு பிரதேச சபைகளின் வளங்களை பயன்படுத்தி குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.இதேவேளை கிராமங்களில் அப்பகுதி மக்களால் சிறு குளங்கள், வாய்கால்கள். மற்றும் வீதிகளில் சிரமதானப்பணிகளை 6 நாட்கள் தொடக்கம் 12 நாட்களுக்கு மேற்கொண்டு அதற்கான 6000 ரூபா பெறுமதியான உணவுப்பொருட்களை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# பொதுக்கூட்டம்

(கரணவாய்)

இமையாணன் அ.த.க. வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சங்கத்தலைவர் சி.வசந்தகுமார் தலைமையில் இடம் பெறும் இப்பொதுக்கூட்டத்தில் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது இதில் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

□ □ □

குடமியன் கிராம அபிவிருத்தி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அபிவிருத்திச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (150)

# பேருந்துச் சேவையை விஸ்தரிக்க கோரிக்கை

(சுன்னாகம்)

ஏழாலை ஊடாக குப்பிளான் 770ஆம் இலக்க பேருந்துச் சேவையை குரும்பசிட்டி வரை விஸ்தரிக்கவேண்டும் என மீள்குடியேறிய குருபசிட்டி பகுதி மக்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வீதியூடாக மாங்குளம், ஏழாலை ஊடாக குப்பிளான் வரைலிலுமே தற்போது போக்குவரத்து சபை பேருந்து மற்றும் தனியார் போக்குவரத்து சேவை இடம்பெறுகின்றது.

எனினும் தற்போது மீள்குடியேற்றத்தின் பின்னர் குரும்பசிட்டி பொன்பிரமானந்த வித்தியாலயம் இயங்குகின்றது. அப்பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் ஆசிரியர்கள் போக்குவரத்தில் பல சிரமங்களை எதிர்கொள்வதுடன் அப்பகுதி மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றவும் வேறு இடங்களுக்கு செல்லுவதற்கு புன்னாலைக் கட்டுவன் வடக்குசந்தி அல்லது குப்பிளான் வரை பலகிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே பஸ்சேவையினை பெற வேண்டியும் உள்ளது.

அப்பகுதி மக்களின் நன்மைகருதி உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து குரும்பசிட்டிவரை இப்பேருந்து சேவையினை நடைபெற ஆவன செய்யவேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (66)

# வருடாந்த உற்சவம்

அல்வாய் வேலிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த கொடியேற்றத்திருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. 12ஆம் திருவிழா பூங்காவனமும் 13ஆம் திருவிழா வேட்டைத் திருவிழா (சப்பறமும்) 14ஆம் திருவிழா தேரும் 15ஆம் திருவிழா தீர்த்த உற்சவமும் நடை பெற வுள்ளது. தினமும் இந்தியா முத்தமிழரசி கலாநிதி சரஸ்வதி இராமநாதனின் பக்திபூர்வமான மெய்யுணர்வூட்டும் நிகழ்வுகள் நடைபெறும். (150, 18)

# சட்டவிரோத பனை தறிப்பு; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வரணி, மிருசுவில் பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் பனை மரம் தறிக்கப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். நாவற்காடு வயல் வெளிப் பகுதிகளில் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத காரணங்களினால் அப்பகுதியில் உள்ள பனை மரங்கள் தறித்து செல்வதாகவும் தெரிவிக்கின்றனர். மேலும் ஒரு காணியில் உள்ள பனை மரங்கள் தறிப்பதற்கு அனுமதியை பெற்றுவிட்டு அருகில் உள்ள காணிகளில் நிற்கும் பனை மரங்களும் தறிக்கப்படுவதாகவும், பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக பனை மரம் தறிக்கப்படுமாயின் இயற்கை வளம் பாதிப்படைவதோடு எதிர்கால சந்ததியினருக்கு பனை மரங்களின் பயன்பாடு இல்லாது போகும். நிலை ஏற்பட்ட வாய்ப்புள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனமெடுத்து ஆண்பனை மரங்களை மட்டும் தறிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக கைவிடுத்துள்ளனர். (14)

# புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவச புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கை தொடராக நடாத்தி வருகின்றது.

இத் தொடரில் 4ஆவது கருத்தரங்கு இன்று காலை 8.30 மணி முதல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கின் வளவாளராக பிரபல ஆசிரியர் பொ.அம்பிகைபாகன் மற்றும் செ.கீத பொன்கலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் மண்டப வாயிலில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்பதுடன் இக் கருத்தரங்கு முற்றிலும் இலவசமானதாகும். (48)

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 276
திகதி - 2014.07.25
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள்  ஆங்கில எழுத்து

06 09 22 35 S

பரிசுத் தொகை ரூபா. 24,075,460/- வெல்லப்பட்டுள்ளது

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | ,220 | 220,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 408 | 408,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9604 | 576,240/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5054 | 202,160/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 126385 | 2,527,700/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18387 | 367,740/- |
| [illegible] | 24,075,460/- | 01 | 24,075,460/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 28,727,300/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 10,000,000/-

2014.07.29ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3722)

சிறு விளம்பரங்கள்

டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3395)

# நவீன கற்றலுக்கு முகங்கொடுப்பதற்கு முன்பள்ளிக் கல்வி அத்தியாவசியமானது

## புற்றளை மகாவித்தியாலய அதிபர் சிவநாதன் தெரிவிப்பு

(வடமராட்சி)

பாடசாலைக்கற்றலுக்கு வேண்டிய அனைத்துத்திறன்களையும் முன்பள்ளியிலேயே நன்கு வளர்த்து சிறார்களை பாடசாலைக்கு அனுப்பும் போது பாடசாலைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இலகுபடுத்தப் படுவதுடன் வேகமாகமாறிவரும் நவீன, விஞ்ஞான, தொழில்நுட்ப உலகுடன் பிள்ளைகளை இணைத்துக் கொள்ளவும் சுலபமாகின்றது.

இவ்வாறு தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் முன்பள்ளி விளையாட்டுவிழாவிலே பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்து உரையாற்றிய புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஏ.சிவநாதன் குறிப்பிட்டார்.

விழாவிற்கு சனசமூகநிலைய செயலாளர் ரீ.பாலகிட்டினப்பிள்ளை தலைமைதாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய சிவநாதன் குறிப்பிட்டதாவது,

முன்பள்ளிச் சிறுவர்களின் உடல், உள ஆற்றல்கள் திட்டமிடப்பட்டு ஒழுங்காக வளர்க்கப்படும் போது [illegible]ன் பிள்ளைகளை சமூகப்பண்புமிக்க சிறந்தபிரஜைகளாக உருவாக்க முடியும் முன்பள்ளிச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டில் மிகக் கவனமான அணுகுமுறைகள் கைக்கொள்ளப்படவேண்டும்.

பெற்றோர்கள் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு திணிப்புக்களையும், நெருக்கடிகளையும் கொடுக்கக் கூடாது. சிறுவர்களின் சுதந்திரமான, காத்திரமான செயற்பாடுகளுக்கு வழிவகுக்க வேண்டும், இது மிக முக்கியமானதாகும். திணிப்புக்களும், நெருக்கடிகளும், அவர்களை நிச்சயம் பாதிப்படையச் செய்துவிடும்.

முன்பள்ளி ஆசிரியைகள் மிகக் குறைந்தவேதனத்துடன் சேவைமனப்பான்மையுடன் பணியாற்றி வருகின்றனர். இவர்களது பணி மிகக் கடினமானது. இவ்வாறான கடினமான பணிகளைச் சமூகத்திற்கு வழங்கும் முன்பள்ளி ஆசிரியைகளை சமூகம் நன்கு மதித்தும் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

இம் முன்பள்ளியின் சகல நடவடிக்கைகளும் மிகச் சிறப்பாக திட்டமிடப்பட்டு ஒழுங்காக நடைபெற்றுவருவது பாராட்டிற்குரியதாகும். முன்பள்ளிகள் விளையாட்டு போட்டிகள், கலைவிழாக்கள், கண்காட்சிகளை நடாத்தவேண்டும். விளையாட்டுப் போட்டிகள் மழலைகள் மத்தியில் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு, குழு நிலை மனப்பாங்கு, விட்டுக்கொடுக்கும் இயல்பு தலைமைத்துவப்படுத்தல், அனைவரையும் மதித்தல் போன்ற இயல்புகளை மேம்படுத்துகின்றன என்றார்.(01)

## புதிய அதிபர் நியமனம்

வடமராட்சி வலயத்திலுள்ள புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் கே.நித்தியானந்தன் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். வேலாயுதம் மகாவித்தியால்ய, அதிபராக கடமையாற்றிய எஸ். திரவியராஜா மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு முன்னதாவே பதவியேற்றுள்ளார். (01)

# நுளம்பு அழிப்பு சோதனை

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் சுகாதார வைத்தி அதிகாரி பணிமனையினால் யாழ்ப்பாணம், வலி.தென்மேற்குப் பிரதேசத்[illegible]ற்குட்பட்ட 4 ஆயிரத்து 980 வீடுகள் நுளம்பு அழிப்புச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதன்போது 19 இடங்களில் நுளம்புகள் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அங்கு பெருகியிருந்த குடம்பிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டே, இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பிரதேசத்திலுள்ள 41 பாடசாலைகள் மற்றும் 32 நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (48)

# இலவச மருத்துவமுகாமில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)


“தெரண” ஊடக வலையமைப்பு சுகாதார அமைச்சுடன் இணைந்து யாழ். மக்களுக்கான மருத்துவ முகாம் ஒன்றை நேற்று யாழ்.நூல் நிலையத்திற்கருகாகவுள்ள திறந்த வெளியரங்கில் நடாத்தியது.

இந்தமருத்துவ முகாமில் நீரிழிவு நோய்க்கான பரிசோதனை நடவடிக்கைகளும் மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து பார்வைக் குறைபாடுள்ளவர்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

இம் மருத்துவ முகாமில் பெருமளவான பொதுமக்கள், படைவீரர்கள் என பலரும் பங்குபற்றி பயனடைந்தனர். (பா)

## ஆமிக்குக் காணி - 03

# ஆமியை மறிச்சு வைச்சிருந்தால்தான்... அதை வைச்சு இவங்கட பிழைப்பு ஓடும்...




ஆமிக்குக் காணி ஏன் தேவைப்படுகுது எண்டு ஒருக்கால் நிண்டு, நிதானமாகச் சிந்திச்சால், நாங்கள் விடுகிற கன பிழைகளைத் திருத்திக் கொள்ளலாம்.

போர் முழுஞ்சாப்பிறகு ஆமி காணி கேட்குது எண்டால், அவை இஞ்ச நிரந்தரமாக இருக்க யோசிக்கினம் எண்டுதான் அர்த்தம்.

அப்பிடி நிரந்தரமாக இஞ்ச தாங்கள் இருக்கோணும் எண்ட எண்ணத்தை ஆமிக்கோ அரசாங்கத்துக்கோ ஏற்படுத்தியது ஆர்?

நாங்கள்தானே!

இதை ஆராவது மறுக்கேலுமோ?

போர் முழுஞ்சதுக்குப் பிறகு மெல்ல மெல்ல வெளியேறிக் கொண்டிருந்த ஆமியை – மறிச்சு ‘இங்கயே இருங்கோ’ எண்ட மாதிரி வில்லங்கமான வேலைகளைப் பார்த்தது, புலிச்சாயம் பூசிய அரசியல்வாதிகள்தான்.

இதில தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்ரை அரைகுறைகளுக்கும் தமிழ்த்தேசிய விடுதலை முன்னணிக்காரருக்கும் உதயன் பேப்பருக்கும் உதிரிப்புலிகளுக்கும் நிறையப் பங்குண்டு.

இது சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த மாதிரித்தான்.

போருக்குப் பிறகு அரசாங்கம் – மகிந்த ராஜபக்ஷ – ஒரு அரசியற் தீர்வைக் கண்டு இந்த நாட்டில ஒரு நிலையான சமாதானத்தை ஏற்படுத்திறதுக்கு முயற்சித்தார்.

அப்ப பார்த்து, சரத்பொன்சேகாவை ஆதரிச்சது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

சரத்பொன்சேகா ஒரு ராணுவத்தளபதி மட்டுமில்ல, நடந்த போரில அவர்தான் முன்னணியாக நிண்டு போரை வெண்டவர். போர்க்குற்றங்கள் எண்டு சொல்லப்படுகிற அத்தினை சங்கதிகளுக்கும் பொறுப்பானவர்.

ஏனெண்டால் அவர்தான் களத்தளபதி.

அவரைப்போய் ஆதரிச்சால்...?

அவரை ஆதரிச்சால் இராணுவத்தை ஆதரிச்சதுக்குச் சமம்.

அவரை இவை (கூட்டமைப்புக்காரர்) ஆதரிச்சதால, இராணுவத்தைத் தான் அணைச்சு நெருக்கமாக வைச்சுக்கொள்ள வேணும் எண்டு மகிந்தர் நினைச்சார்.

அப்பதான் சரத்தை விடத் தன்னை அதிகமாக ராணுவம் நம்பும் எண்டு எண்ணினார்.

அதால இராணுவத்துக்கு இனிப்பான காரியங்களை மகிந்தர் பாக்கத்தொடங்கினார்.

இப்பிடியே தொடங்கின பிழையான விசயங்கள், வளர்ந்து வளர்ந்து சும்மா நிண்ட ஆமி–யோட சொறியிறது வரையில வந்தது.

இதின்ரை உச்சக்கட்டமாக புலிகளை மீளவும் கொண்டு வாறமாதிரிக் கொஞ்சப்பேர், தங்கட அரசியல் லாபத்துக்காக மாவீரர்நாளைக் கொண்டாடிறதும், கரும்புலிகள் நிகழ்வை அனுஷ்டிக்கிறதும் எண்டு வெளிக்கிட்டினம்.

போராட்டம் நடக்கேக்க, அதில ஒரு துரும்பைக்கூடப் போடாதவன்கள்தான் இந்த மாய்மாலங்களைச் செய்ய வெளிக்கிட்டவன்கள்.

மாவீரர்நாளுக்கு மரக்கன்றுகளை நட வெளிக்கிட்ட ஐங்கரநேசனுக்கும் இந்தப் போராட்டத்துக்கும் என்ன சம்பந்தம் எண்டு ஆரெண்டாலும் சொல்லுங்கோ பாப்பம்.

அதைப்போலத்தான் இன்னொரு ஆள், சிறிதரன் எம்பி.

இவர் உச்சக்கட்டப்போர் நடந்தபோது வன்னிக்கு வெளியே நிண்ட ஆள்.

அந்த நாளையில வன்னிக்கு வெளியால – கொழும்பு, இந்தியா, வெளிநாடுகள் எண்டு சுத்தித்திரியக் கூடியமாதிரி இருந்தால்.... எப்பிடித் தேசியவாதியாக இருக்க முடியும்?

உண்மையான தமிழ்த்தேசியவாதிகளாக இவையெல்லாம் இருந்திருந்தால் புலிகளோட இருந்திருக்க வேணும். அப்பிடியே புலிகளோட உடன்கட்டை ஏறியிருக்க வேணும்.

ஆனால், இவையெல்லாம் அப்பிடி இருக்கேல்ல.

ஒரு கிறனைட்டைக் கூட எப்பிடி அடிக்கிறது எண்டு தெரியாத போராளிகள்.

ஒரு நாளாவது பங்கர் வெட்டின அனுபவமே இல்லாத தேசியப்புலிகள்.

இவைதான் இப்ப ஆமியை வழிமறிச்சுப் போராடுகிறவையும். ஆமியைக் கலைக்கப் போராடுகிறவையும்.

இதில கஜேந்திரன், பத்மினி கோஸ்டி இன்னும் ஒரு நாடகத்தைப் போடுகினம்.

இந்த நாடகமும் சுத்தப்பழசுதான்.

நீங்கள் உங்கட வீட்ட போங்கோ. நான் எங்கட வீட்டுக்குப் போறதுக்கு... எண்ட மாதிரி...

ஆமிக்காரரை அவையின்ரை வீட்டுக்குப் போகும்படியும்... அப்பதான் தாங்களும் வீட்டுக்குப் போகலாம் எண்ட மாதிரியும் ஒரு அறிவிப்பு.

இல்லாட்டில், நாங்கள் இப்பிடியே றோட்டில நிண்டு உங்களுக்கு எதிராகப் போராடுவம் எண்ட மாதிரியும் ஒரு எச்சரிக்கை.

போராட்டம் நடந்தபோதும் போர் தீவிரமாக நடந்தபோதும் வாலைச் சுருட்டிக்கொண்டு பம்மிக்கொண்டு திரிஞ்சவனெல்லாம், இப்ப வீரவேங்கையாகவும் லெப்ரினன்ற் கேணலாகவும் பிரிகேடியராகவும் தங்களை உயர்த்திப் பாக்கிறாங்கள்.

என்ன செய்யிறது, ஆமியை மறிச்சு வைச்சிருந்தால்தானே... அதை வைச்சுப் பிழைக்கலாம்...

தேவைக்கு அதிகமான செல்வம் சுமையாகும்.
- மார்ஸோ

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## உண்மையில் எதை நம்புகிறோம்?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மட்டுமல்ல தமிழ் ஊடகங்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், சந்திகளில் தேநீர்க் கடைகளில் பள்ளிக்கூட வகுப்பு இடைவேளைகளில் எல்லாம் அரசியலை அலசுவோர் எல்லாரும் மகிந்தவுக்கும், சிங்கள அரசுக்கும், சிங்கள சமூகத்துக்கும்தான் குற்றச்சாட்டுகள், புத்திமதிகள், எச்சரிக்கைகள் எல்லாவற்றையும் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவற்றை நாமே சொல்லி, "ஞாயந்தானே" என்று நாமே புளகித்து, "திருந்த வேண்டியது அந்தப் பக்கம்தான், அவைதான் குற்றவாளிகள் எண்டு உலகமே சொல்லி விசாரிக்க நிக்குது, இவ்வளவு பிழையையும் செய்துபோட்டு சர்வதேசத்திட்ட அவை தப்பேலாது..." என்று பேசியும் எழுதியபடியும் காத்துக்கொண்டிருக்கிறோம்.

எங்களுடைய பிழைகள் பற்றியும் சர்வதேசம் விசாரிக்கப் போகிறது என்பதோ, சிங்களத் தலைமையும் சமூகமும் தாங்கள் குற்றம் செய்ததாக நினைக்கவில்லை என்பதோ, நாங்கள் சர்வதேசத்தின் பக்கம் சாயச் சாய அவர்கள் நாட்டைக் காப்பாற்றும் எண்ணத்தில் அரசுக்கு மேலும் மேலும் வலுவேற்றுகிறார்கள் என்பதோ எதுவும் விளங்காதது போல நாங்கள் 'வீரமுடன் முன்னேறும்' கனவிலிருக்கிறோம்.

மகிந்த அரசு அநியாயமாகத் தோற்றுக் கவிழப் போகிறது என்பதைத் தெரிந்து கொண்டவர்களைப் போல அனுதாபம் கொண்டு "அரசு தன் போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் கஷ்டப்படப் போகிறது" என்னும் பாணியில் அறிவுரைகளை வேறு எழுதிக் கொண்டிருக்கிறோம்.

சரி, மகிந்த அரசு தோற்றால் தமிழர்கள் அடையப்போகும் லாபம் என்ன? இதுபற்றி யாரும் மூச்சு விடுவதில்லை. இப்பிடியே மகிந்த அரசும் சிங்கள சமூகமும் தங்கள் பிழைகளை உணர்ந்து திருந்துவதற்கா நாம் வகுப்பெடுத்துக் கொண்டிருக்கப் போகிறோம்?

சிங்கள சமூகத்திற்கு நாங்கள் புத்திமதி சொல்வதை ரசிக்கும் நிலையிலா அவர்கள் உள்ளார்கள்? நேற்றுவரை அவர்களை கொன்றுகொண்டிருந்த தரப்பின் பின்னால் நின்றவர்களல்லவா நாங்கள்! அவர்களை மோதியழித்து வெல்லப்போவதாக நின்றவர்களல்லவா?

மறுபக்கம் "தமிழர்களாகிய நீங்கள் இனியாவது உங்கள் மனப்போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்று அவர்கள் புத்திமதி சொன்னால், அதை ரசிப்போமா நாங்கள்? "செய்வதையும் செய்து போட்டுப் புத்தி வேறு சொல்கிறீர்களா?" என்று பொங்கிவிட மாட்டோமா பொங்கி?

எங்களுக்கு ஏன் அந்தத் தேவையில்லாத அலுவல்? "தமிழ் மக்களுக்கு உரிய அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதுதான் நியாயம்; அப்போதுதான் இந்த நாட்டு மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ முடியும்" என்பதை அவர்களுக்கு அவர்களது எழுத்தாளர்களும் அறிஞர்களும் தலைவர்களும் சொல்லட்டும்.

நாங்கள் தீர்வுக்காகவும் அதற்கான பேச்சுகளைத் திறப்பதற்குமென எங்கள் தரப்பில் கையாள வேண்டிய உபாயங்கள் என்ன? இன்றைய நம்மிடமுள்ள பலத்திலும் நிலைமையிலும் யதார்த்தத்திலும் நாம் எதிர்பார்க்க கூடியது என்ன? செய்யக்கூடியது என்ன? என்று நமது மக்களுக்கல்லவா நாங்கள் விளக்கி எழுதவும் பேசவும் வேண்டும்–முயல வேண்டும்?

நேற்றுவரை இரு தரப்புமே ஒருவரையொருவர் கொன்று கொன்றுதான் மூர்க்கமாகப் போராடினோம். அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்; நாங்கள் தோல்வியடைந்த தரப்பாகிவிட்டோம். இந்நிலையில் அவர்களையே நாம் தொடர்ந்து குற்றம் சாட்டி நம்மைத் திருப்திப்படுத்திக் கொண்டிருப்பது, இன்று ஆயுதங்கள் பறிபோன நிலைமையில் அதே மோதலைத் தொடர்ந்து கொண்டிருப்பதாகத்தானே அர்த்தப்படும்?

இப்படியே தொடர்ந்தும் பகைவளர்த்தபடி–அதனால் வீரக்கிளுகிளுப்படைந்தபடி நம் தரப்பை முறுக்கேறிய நிலையில் வைத்துக் கொண்டு, இங்கு இணக்க வாழ்வும் தீர்வும் வரும் என்று உண்மையில் நம்புகிறோமா?

- *ஆசிரியர்*

# யாழ். நகர்வரை "யாழ்தேவி"

# செப்ரெம்பரில் சாத்தியம்

யாழ்தேவி ரயில் 24 வருடங்களின் பின்னர் மீண்டும் எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்திற்கு பயணிக்க இருப்பதாக போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்தார். யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதை நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், செப்ரெம்பர் 15 ஆம் திகதி பரீட்சார்த்தமாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை ரயில் சேவை மேற்கொள்ளப்படவிருப்பதாக குறிப்பிட்டார்.

செப்ரெம்பர் இறுதியில் கொழும்பு- யாழ்ப்பாணம் இடையிலான ரயில் சேவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட பின் பொதுமக்களுக்கு யாழ்ப்பாணம் செல்ல அவகாசம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதை மீளமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதோடு யாழ். ரயில் நிலையமும் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இதன்படி செப்ரெம்பர் 15 ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ். வரையான பரீட்சார்த்த ரயில் சேவை போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் தேவி ரயில் சேவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, யாழ்தேவி இந்த வருட இறுதியில் காங்கேசன்துறை வரை பயணிக்கும் என்றும் தெரிவித்தார்.

செப்ரெம்பர் இறுதி முதல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை 3 ரயில்கள் தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

# சேதனப் பசளை பாவனை விவசாயிகளுக்கு ஊக்கம்

மத்திய விவசாய அமைச்சின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிப்பு திட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தினைச் சேர்ந்த 725 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் விவசாயச் செய்கைகளில் இரசாயன உரங்களின் பாவனைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்தி சேதனப் பசளைப் பாவனையினை ஊக்குவிக்கும் வகையில் மத்திய விவசாய அமைச்சின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கண்டாவளைப் பிரதேசத்தின் முரசுமோட்டை, புன்னைநீராவி, புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளில் இருந்து 725 விவசாயப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.குறித்த சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருவதாகவும் சேதனப்பசளை உற்பத்திக்கான, பொலித்தீன் மற்றும் பொஸ்பேற் என்பனவும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடன் கொடுத்தவருக்கு கத்திக்குத்து

கொடுத்த பணத்தினைத் திருப்பிக் கேட்கச் சென்றவர் மீது கடன் வாங்கியவர் கத்தியால் குத்திய சம்பவம் யாழ்., அரசடிப் பத்திரகாளி கோவிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், அதேயிடத்தைச் சேர்ந்த 53 வயதுடைய ந.கமலநாதன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்., போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி படுகாயமுற்றவர், தனது உறவினர் ஒருவருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் கைமாற்றாகக் கொடுத்துள்ளார்.

இந்நிலையில், கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்கச் சென்ற வேளையிலேயே கத்திக்குத்துக்கு ஆளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

# படகு அகதிகளை அடையாளம் காண இந்திய உதவியை நாடுகிறது ஆஸி.

(சிட்னி)

ஆஸி. நோக்கிச் சென்ற படகு அகதிகளை அடையாளம் காணுவதற்கு இந்திய அதிகாரிகளின் உதவி நாடப்பட்டுள்ளது. 157 அகதிகள் தொடர்பில் அவுஸ்ரேலியா இந்தியாவுடன் கையாளும் விடயங்கள் சட்டரீதியற்றவை என அகதிகள் வள நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன், 157 அகதிகளும் நிலப்பரப்புக்கு கொண்டு வருவதை உறுதிப்படுத்தவில்லை என அவுஸ்ரேலிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

எனினும் அவர்கள் இந்திய அதிகாரிகளின் அடையாளப்படுத்தல் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என மொரிசன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள அகதிகள் வள சட்டத்தரணி, அகதியொருவர் மூன்றாம் நாடு ஒன்றில் பாதுகாப்பாக இருப்பவராக இருந்தால் அவர் அகதியாக கருதப்படமாட்டார் என சுட்டிக் காட்டியுள்ளார்.

# முதலீட்டாளர்களை ஊக்குவிக்க குறுகியகால கடன் உதவி திட்டம்

## சார்க் அமைப்பு ஏற்பாடு

(கொழும்பு)

குறுகிய கால கடன் சந்தை மூலம் முதலீட்டாளர்களுக்கு ஊக்கமளிக்க சார்க் நாடுகளின் நிதியமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

சார்க் நிதியமைப்பின் 28ஆவது குழுக்கூட்டம் மற்றும் சார்க் அமைப்பின் ஆளுநர்களின் கலந்துரையாடலும் கடந்தவியாழன் இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் மத்திய வங்கியினதும், சார்க் பிராந்தியத்தினதும் நிதி அமைச்சகங்களின் ஆளுநர்கள் நிதிச்செயலாளர்கள் ஏனைய பிரதிநிதிகள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

இடம்பெற்ற கருத்தரங்குகளின் மூலம் பல்வேறு வகையான கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

"ஒதுக்கப்பட்ட முதலீடுகளின் இருப்புக்களின் பரஸ்பர நன்மைகளை பிரதேச ரீதியாக அனைவருக்கும் பகிர்ந்தளித்தல்" என்ற தொனிப்பொருளின் கீழ் மத்திய வங்கியின் பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழு கூட்டமொன்றையும் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் வரவேற்புரையை நிகழ்த்தி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ரகுராம் ராஜனால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது.

சார்க் நாட்டில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகள் அனைவரும் வர்த்தகம் சம்பந்தமாக கலந்துரையாடலை மேற்கொண்டனர். இக்கலந்துரையாடலின் போது ஒப்பந்தமொன்று இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ரகுராம் ராஜன் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தலைமையில் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வொப்பந்தத்தின் முக்கிய நோக்கமாக இலங்கை அரசின் பாதுகாப்புச்சந்தையில் கூடிய அளவு பணத்தொகையாக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இலங்கை மத்திய வங்கி பல்வேறு வகையான வணிக முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபட முடியும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தற்போதய வளர்ந்து வரும் சந்தைகளில் முதலீட்டு அளவீடு என்பது முக்கியமானதொன்றாகும். பொருளாதார சந்தையின் சவால்களில் முதலீட்டுக்கான உண்மையான கவனத்தை திருப்ப முடியும் என்று ராஜன் தெரிவித்துள்ளார்.

கடன் சந்தைகள் பற்றியும் மேலும் தனது கருத்தை பகிர்ந்து கொண்ட அவர் குறுகிய கால கடன் சந்தைகள் சில விதமான முதலீட்டாளர்களை ஈர்க்க எண்ணியுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

# மாகாண சபையை முடக்குவது மக்கள் விரோத நிகழ்ச்சி நிரல்

— சங்கர சிவன் —

மாகாண சபைகள் மூலம் மக்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. மத்திய அரசு நேரடியாகக் கையாள்வதன் மூலம் இடம்பெறும் தாமதம் பல விடயங்களில் தவிர்க்கப்படுகின்றது. பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் மாகாண சபைகளுக்கு முப்பத்தேழு விடயங்களை ஒதுக்கியிருக்கின்றது. இவற்றுள் பொலிஸ் அதிகாரமும் காணி அதிகாரமும் மத்திய அரசாங்கத்தால் இன்னமும் கையளிக்கப்படவில்லை. மற்றைய விடயங்களை மாகாண சபைகள் அம்மாகாணத்தில் வாழும் மக்களின் உடனடித் தேவைகளின் அடிப்படையில் முன்னுரிமை அளித்துச் செயற்பட முடியும். வடமாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாண சபைகள் இவ்வாறு செயற்படுகின்றன. மக்களுக்கு நன்மை பயக்கும் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. வடமாகாண சபையில் எதுவும் நடப்பதாக இல்லை. தேர்தல் காலத்தில் தலைவர்கள் அளித்த வாக்குறுதிகளை நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள் இன்று ஏமாற்றப்பட்டவர்கள் என்ற நிலையில் இருக்கின்றனர்.

வட மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் காட்டும் அக்கறையை மாகாண சபையைச் செயற்படுத்துவதில் காட்டுவதாக இல்லை. மாகாண சபைக்கூடாக எவ்வளவோ காரியங்களை நிறைவேற்றப்போவதாக தேர்தல் மேடைகளில் அளித்த வாக்குறுதிகளுள் ஒன்று கூட இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. இந்தச் செயலின்மைக்கு முதலமைச்சரும் மற்றைய கூட்டமைப்புத் தலைவர்களும் மூன்று காரணங்களைக் கூறுகின்றார்கள். மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லை. ஆளுநர் செயற்பட விடுகின்றாரில்லை, பிரதம செயலாளர் தடையாக இருக்கின்றார் என்பனவே அந்த மூன்று காரணங்களும். இவை உண்மையான காரணங்களல்ல. நொண்டிக் காரணங்கள்.

**மாகாண சபைக்குரிய அதிகாரங்களை எப்படிப் பயன்படுத்துவதென்பது தனக்குத் தெரியும் என்றும் வாக்குறுதிகளைத் தன்னால் நிறைவேற்ற முடியும் என்றும் முதலமைச்சர் மேடைக்கு மேடை கூறினர். இப்போது மாகாண சபைக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று கூறும் இவர் தேர்தல் காலத்தில் மக்களுக்கு பொய் வாக்குறுதிகள் அளித்தாரா அல்லது மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை என்று இப்போது பொய் சொல்கின்றாரா என்பது பற்றி மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்.**



முதலமைச்சர் உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்தவர். மாகாண சபைக்கு அதிகாரங்கள் உள்ளனவா இல்லையா என்பதும், உண்டென்றால் எவ்வளவு அதிகாரங்கள் உள்ளன என்பதும் மாகாணத் தேர்தல் களத்துக்கு வருவதற்கு முன்னரே இவருக்கு தெரிந்திருக்க வேண்டும். அது தெரிந்திருந்ததால் தான் தேர்தல் மேடைகளில் எந்தவித தயக்கமும் இல்லாமல் வாக்குறுதிகளை வழங்கினார். மாகாண சபைக்குரிய அதிகாரங்களை எப்படிப் பயன்படுத்துவதென்பது தனக்குத் தெரியும் என்றும் வாக்குறுதிகளைத் தன்னால் நிறைவேற்ற முடியும் என்றும் மேடைக்கு மேடை கூறினார். மாகாண சபைக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று கூறும் இவர் தேர்தல் காலத்தில் மக்களுக்குப் பொய் வாக்குறுதிகள் அளித்தாரா அல்லது மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை என்று இப்போது பொய் சொல்கின்றாரா என்பது பற்றி மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

சொல்வது ஒன்றும் செய்வதுஇன்னொன்றும் கூட்டமைப்பின் பாரம்பரியம். தேர்தல் காலத்தில் எண்ணற்ற வாக்குறுதிகளை அளிப்பதும் தேர்தல் முடிந்ததும் அளித்த வாக்குறுதிகளுக்கு முரணாக நடப்பதும் இந்தப் பாரம்பரியத்தின் வெளிப்பாடு. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று உச்ச நீதிமன்றத்தில் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தார்கள். ஆனால், இன்று வரை அதற்கு அமைவான செயற்பாடு எதுவும் இல்லை. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு தான் இவர்களின் உண்மையான நிலைப்பாடென்றால் அதற்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்திருக்க வேண்டும். அரசியல் தீர்வை வலியுறுத்தி வெகுஜனப் போராட்டங்களை நடாத்தியிருக்க வேண்டும். காணி அபகரிப்புக்கு எதிராகவும் மீள்குடியேற்றத்துக்காகவும் அடிக்கடி ஆர்ப்பாட்டங்களையும் சத்தியாக்கிரகங்களையும் நடத்துபவர்கள் அரசியல் தீர்வை வலிறுத்தி ஏன் ஒரு வெகுஜனப் போராட்டத்தை நடத்தவில்லை? இவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களும் சத்தியாக்கிரகங்களும் புலிசார்புப் புலம்பெயர் அமைப்புகளின் பாராட்டைப் பெறுபவை. அரசியல் தீர்வுக்கான வெகுஜனப் போராட்டம் அந்தப் புலம் பெயர் அமைப்புகளை ஆத்திரமடையச் செய்வது. புலம்பெயர் அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக செயற்படுபவர்களால் அரசியல் தீர்வுக்கான போராட்டத்தை எப்படி நடாத்த முடியும்?

சுரேஷ் பிரேமச்சந்திரனின் கட்சி மகாநாட்டில் உரையாற்றிய சம்பந்தன், வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளைத் தங்கள் பிரதிநிதிகள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளும் அதிகாரப் பகிர்வு முறையையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்று கூறினார். இது தமிழ் அரசியலுக்கு புதிய கருத்தல்ல. மற்றைய தமிழ்க் கட்சிகள் மாத்திரமின்றி இடது சாரிகளும் இதையே கூறுகின்றார்கள். அவை இத்தீர்வை அடைவதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிகளையும் முன்வைக்கின்றன. இத்தீர்வுக்கான ஆலோசனைகள் முன்வைக்கப்படும் போது அவற்றை மற்றைய கட்சிகள் ஆதரித்திருக்கின்றன. இத்தீர்வுக்கான ஆலோசனைகளை ஆதரிக்க கூட்டமைப்பு தயாராக இல்லை. இவ்வாறான தீர்வில் கூட்டமைப்புக்கு உண்மையான நாட்டம் இல்லை. அதனால் தான் சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை எதிர்த்தது. இப்படிப் பேசிய சம்பந்தன் இதே அடிப்படையில் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தைக் கட்சிக்குள் வலியுறுத்துவாரா?

தீர்வொன்றை முன்வைத்துக் கோஷ அரசியல் நடத்துவதோடு தனது நோக்கம் நிறைவேறிவிட்டதாகக் கூட்டமைப்பு கருதுகின்றது. உணர்ச்சிகரமான வார்த்தைகளுடன் கூடிய கோஷ அரசியல் மக்களைக் கவர்வது வழக்கம். இந்தக் கவர்ச்சியிலேயே கூட்டமைப்பு இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கின்றது. சம்பந்தன் கூறிய தீர்வை மேடைப் பேச்சுக்கள் மூலமும் ஆவேச அறிக்கைகள் மூலமும் நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாது. கூட்டமைப்புக்கு அந்த நோக்கம் இல்லை. கோஷ அரசியல் மூலம் வாக்குகள் கிடைத்தால் அவர்களுக்குப் போதும். இந்தத் தீர்வை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உண்மையான நோக்கம் கூட்டமைப்புக்கு இருக்குமேயானால் நடைமுறைச் சாத்தியமான வழியில் செல்ல வேண்டும். இன்றைய நிலையில் மாகாண சபையே இதற்கு பொருத்தமானது. மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்று படிப்படியான வளர்ச்சிக்கூடாக சம்பந்தன் கூறிய தீர்வை நோக்கிச் செல்ல முடியும். புலம் பெயர் அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலை ஏற்று அரசியல் தீர்வைத் தவிர்க்கும் இலக்குடன் செயற்படுகின்ற கூட்டமைப்பு, இந்த வழிமுறையைப் பின்பற்றாதிருப்பதொன்றும் புதுமையானதல்ல. அரசியல் தீர்வு இடம்பெறுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடனேயே அதிகாரங்கள் இல்லை எனக் கூறி மாகாண சபையை முடக்குகின்றார்கள்.

காணி அதிகாரமும் பொலிஸ் அதிகாரமும் நீங்கலாக முப்பத்தைந்து அதிகாரங்கள் மாகாண சபைக்கு இருப்பதாக மேலே பார்த்தோம். மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லை எனக் கூறுபவர்கள் இந்த முப்பத்தைந்து அதிகாரங்களுக்கு (விடயங்களுக்கு) என்ன நடந்தது என்பதையும் கூறவேண்டும். இவ்விடயங்களை அரசாங்கம் வடமாகாண சபையிடமிருந்து எடுத்துக் கொண்டுவிட்டதா? அப்படியானால் அது பற்றிய அரசாங்க அறிவித்தல் எப்போது வெளியாகியது? முதலமைச்சரும் மற்றவர்களும் இது பற்றி மக்களுக்கு விளக்கமளிப்பார்களா? ஆளுநரும் பிரதம செயலாளரும் மாகாண சபையின் செயற்பாட்டுக்குத் தடையாக இருக்கின்றார்கள் எனக் கூறும் முதலமைச்சர், அது பற்றியும் மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும். மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட எந்தெந்த விடயங்களில் நடவடிக்கை எடுக்க முற்பட்ட போது ஆளுநரோ பிரதம செயலாளரோ தடையாக இருந்தார்கள் என்பதை முதலமைச்சர் ஆதாரபூர்வமாக மக்களுக்கு கூறவேண்டும். அப்படிக் கூற அவரால் இயலாதென்றால் அவருடைய குற்றச்சாட்டு அடிப்படையற்றது.

**காணி அதிகாரமும் பொலிஸ் அதிகாரமும் நீங்கலாக முப்பத்தைந்து அதிகாரங்கள் மாகாண சபைக்கு இருப்பதாக மேலே பார்த்தோம். மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லை எனக் கூறுபவர்கள் இந்த முப்பத்தைந்து அதிகாரங்களுக்கு (விடயங்களுக்கு) என்ன நடந்தது என்பதையும் கூற வேண்டும். இவ்விடயங்களை அரசாங்கம் வடமாகாண சபையிடமிருந்து எடுத்துக் கொண்டுவிட்டதா? அப்படியானால் அது பற்றிய அரசாங்க அறிவித்தல் எப்போது வெளியாகியது? முதலமைச்சரும் மற்றவர்களும் இது பற்றி மக்களுக்கு விளக்கமளிப்பார்களா?**

மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை என்பது பொய். ஆளுநரும் பிரதம செயலாளரும் மாகாண சபையின் செயற்பாட்டுக்கு தடையாக இருக்கின்றார்கள் என்பதும் பொய். இப்படிப் பொய்யான காரணங்களைக் கூறி மாகாண சபையை ஏன் முடக்குகின்றார்கள் என்பது பற்றி தமிழ் மக்கள் நிதானமாக சிந்திக்க வேண்டும். மாகாண சபை செயற்படத் தொடங்கினால் அது அரசியல் தீர்வின் ஆரம்ப நகர்வாகிவிடும் என்பதற்காகவே பொய்யான காரணங்களைக் கூறி முடக்குகின்றார்கள். கூட்டமைப்புக்கு சிறிதளவும் அரசியல் தீர்வில் அக்கறை இல்லை. நடைமுறைச் சாத்தியமற்ற தனிநாட்டுக் கனவில் மிதக்கின்ற புலம் பெயர் அமைப்புகளைத் திருப்திப்படுத்துவதே கூட்டமைப்பின் ஒரே நோக்கம். அதற்காக மக்களின் நலனுக்கு குந்தகமாகச் செயற்படுகின்றார்கள்.

# ஆசிரிய மாணவர்கள் குழு மோதலில் குதிப்பு




(கொழும்பு)

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிலுநர் ஆசிரியர்கள் இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதல் குறித்து பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பயிலுநர் ஆசிரியர்களுக்கு இடையிலான மோதலில் காயமடைந்த ஏழு பேர் கொட்டகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை குறித்து அச்சமடையத் தேவையில்லை என்று வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

கல்வியியற் கல்லூரியின் உணவகத்தில் நேற்று முன்தினம் இரவு உணவு வேளையின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள் ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பயிலுநர் ஆசிரியர் ஒருவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்ததாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

# இடைவெளியற்ற தேசிய நல்லிணக்கம் இதுவே எமது அரசின் இலக்கு

## பொதுஜன ஆதரவு கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)


எமது நாட்டில் தங்குதடைகள் அற்றதும் இனங்களுக்கிடையில் இடைவெளிகள் அற்றதுமான தேசிய நல்லிணக்கத்தின தொடர்ச்சியை நாம் பேணிக் கொள்ளவேண்டும் என்றும் நாட்டில் அனைத்து சமயங்களையும் பாதுகாக்கும் கடப்பாடு இருப்பதால் அரசு அது தொடர்பில் தீவிரமாகச் செயற்படும் நிலையில் மிக நீண்ட காலமாக நாட்டில் நிலவிய தேசிய ஒற்றுமை- நல்லிணக்கம் என்பவற்றை தொடர்ச்சியாக கொண்டு செல்வது அனைத்துப் பிரஜை களினதும் கடமை என ஜனாதிபதி தெரிவித்தார்.

அநுராதபுரம் மொஹிதீன் ஜும்மா முஸ்லிம் பள்ளிவாசலுக்கு கடந்த வியாழன் மாலை விஜயம் செய்த ஜனாதிபதி அங்கு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆதிதொட்டு நிலவும் கலாசார பிணைப்பை தொடர்ந்தும் கொண்டு செல்வது மிகவும் அவசியம். எமது நாட்டுக்கேயுரிய அனைத்து இன மக்களுக்கும் பொதுவான கலாசாரம் எம்மிடம் காணப்படுகிறது. வேறு நாட்டின் கலாசாரம் எமக்குத் தேவையில்லை. சகோதரதத்துவத்துடன் எமது கலாசாரத்தையும் தனித்தன்மையையும் கொண்டு செல்ல நாம் கைகோர்க்க வேண்டும்.

கோரமான தீவிரவாதத்தினால் இருண்டிருந்த இறந்த காலத்தை நாம் மறந்துவிடக் கூடாது. அவற்றில் கிடைத்த அனுபவங்களை எதிர்கால சந்ததியினரும் அனுபவிக்காமல் இருப்பதற்கு இன-மத-பேதமின்றி அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று தெரிவித்தார்.



இதன்போது அமைச்சர் திஸஸ கரலியத்த- எஸ்.எம்.சந்திரசேன- வடமத்திய மாகாண ஆளுநர் கருணாரத்ன திவுல்கனே முதலமைச்சர் எம்.எம்.ரஞ்சித்- பிரதி அமைச்சர்களான டபிள்யூ.பீ. ஏக்கநாயக்க- வீரகுமார திஸாநாயக்க- பீ.முதுகுமார ஆகியோர் உடனிருந்தனர்.

# இலங்கையில் அகதி அந்தஸ்து

## ஆப்கான். பெண் கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

ஆப்கானிஸ்தானிய பெண் ஒருவர் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரக பாதுகாப்பு வாயிலில் அமர்ந்து கோரிக்கை ஒன்றை வலியுறுத்தி வருகிறார்

தமது கணவருக்கும் ஐக்கிய நாடுகள் அகதிகள் பேரவை இலங்கையில் அகதி அந்தஸ்தை வழங்கவேண்டும் என்று அவர் கோரி வருகிறார்.

2012 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த ஆப்கானிஸ்தானிய ரெஹானாவுக்கு ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் அந்தஸ்தை வழங்கியுள்ளது. எனினும் அவரது கணவரான அஹமட்டுக்கு ஐக்கிய நாடுகள் சபை அகதி அந்தஸ்தை வழங்கவில்லை. இதனையடுத்தே ரெஹானா போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார்.

தமது கணவருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டால் மாத்திரமே தாம் ஐக்கிய நாடுகள் வளவில் இருந்து வெளியேறப்போவதாக ரெஹானா குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ரெஹானாவின் கணவருக்கு அகதி அந்தஸ்தை வழங்குவதில் ஏன் தாமதம் என்ற விடயத்தை ஐக்கிய நாடுகள் அலுவலகம் வெளியிடவில்லை.

இதேவேளை ரெஹானா ஆப்கானிஸ்தானின கந்தகாரில் வசிப்பவர் என்றும் தாய் தந்தையர் அற்றவர் என்றும் அவரை வளர்ப்பு தாய், ஏற்கனவே நான்கு பெண்களை திருமணம் செய்த போதைவஸ்து வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்ததாகவும் அதன் பின்னரே ரெஹானா, அஹமட்டை சந்தித்து திருமணம் புரிந்து காபூலுக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த போதைவஸ்து வர்த்தகர் மூலம் ரெஹானாவுக்கு ஆபத்து நேரலாம் என்ற அச்சத்திலேயே அவரும் கணவரும் இலங்கைக்கு வந்து ஐக்கிய நாடுகள் சபையில் அடைக்கலம் கோரியுள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

# இனவாதப்போக்கில் அரசு

## ஜே.வி.பி. போர்க்கொடி



அரசாங்கம் இனவாதத்தை பரப்பி வருவதாக ஜே.வி.பி.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. அரசியல் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு அரசாங்கம் இனவாதத்தை பரப்பி வருவதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இனவாதத்தை எதிர்க்கும் வகையில் கொழும்பில் நடைபெற்ற கையெழுத்து திரட்டும் நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம், ஈரான் மற்றும் உக்ரைன் போன்ற நாடுகளில் இவ்வாறான நிலைமை காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இனவாதத்தை தூண்டும் அரசியல் சக்திகளை இல்லாதொழிக்க அனைத்து மக்களும் இணைந்து செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். யுத்தம் காரணமாக நாடு பாரியளவில் அழிவுகளை எதிர்நோக்கியதாகவும் மீண்டும் அவ்வாறான ஓர் அழிவினை எதிர்நோக்க தயாரில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தடம் மாறிப் பயணிக்கிறது ஐ.தே.க.

## அரசியல் விவாத அரங்கில் கண்டனம்

ஐக்கிய தேசிய கட்சி தவறான பாதையில் சமூகம் ஒன்றை உருவாக்க முனைவதாக பிரதியமைச்சர் சரண குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஹிரு தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பலய அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் ஐக்கிய தேசிய கட்சியின் கிராமத்தை நோக்கிய பயணம் என்ற தொனிப்பொருளில் விவாதம் இடம் பெற்றது.

அரசாங்க தரப்பில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் பிரதியமைச்சர் சரண குணவர்தன ஆகியோர் நிகழ்ச்சியில் இணைந்திருந்தனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரான் விக்ரமரத்ன மற்றும் அஜித் பி.பெரேரா ஆகியோரும் பங்குகொண்டனர்.

# தயான் ஜெயதிலகவின் கூற்றுக்கு அரசு தரப்பிலிருந்து கண்டனம்



(கொழும்பு)

முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக்கவின் குற்றச்சாட்டை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இஷ்ரேலில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் வடக்கில் மேற்கொள்ளப்படுவதாக தயான் ஜயதிலக குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை முற்று முழுதாக நிராகரிக்கின்றோம். என இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

தயான் ஜயதிலக 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென கோரி வருகின்றமை குறிப்பிடத்தககது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பிரதிநிதிகள் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டு இஷ்ரேலுக்கு விஜயம் செய்து, அந்நாட்டு சுதேசப்பாதுகாப்புப் படையினருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகவும், சுதேசப் பாதுகாப்புப் படை முன்வைத்த யோசனையை சம்பிக்க தரப்பினர் ஏற்றுக்கொண்டதாகவும் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

தயான் ஜயதிலகவின் கோரிக்கைகளை ஏற்கப் போவதில்லை எனவும் குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# யானை தாக்கி ஒருவர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரை பிரதேசத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகபிரிவின் கீழுள்ள பலாச்சோலை கிராமத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் யானை தாக்கியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

மூவர் காயமடைந்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி நடராஜா (வயது-61) என்பவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பவளசிங்கம் பூபாலரெத்தினம் (வயது-39), கேதாரம் அமிர்தலிங்கம் (வயது-21), மற்றும் பாடசாலை மாணவி ஒருவர் என மூவர் படுகாயமடைந்துள்ளனர். வீட்டு வளவில் வேலை செய்துகொண்டிருந்த நபரையே யானை கடுமையாக தாக்கியுள்ளது.

# ரமழான் உணவுப்பொதி வறிய குடும்பங்களுக்கு

(கொழும்பு)

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு பேலியகொடை மீன் சந்தைத் தொகுதியின் வியாபாரிகள் சங்கம் வறிய குடும்பங்களைச்சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கு உலர் உணவுப்பொதிகளை இலவசமாக வழங்கியது.

பேலியகொடை மீன் சந்தைத் தொகுதியில் நடைபெற்ற இது தொடர்பான நிகழ்வில் கடற்றொழில் மற்றும் மீன் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன பிரதம அதிதியாக கலந்துகொண்டார்

சுமார் 175 பேருக்கு சுமார் மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. மீன் சந்தைத் தொகுதியிலுள்ள இலங்கை வங்கி கிளையின் இரத்த தான நிகழ்விலும் அமைச்சர் கலந்துகொண்டார்.

கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எம்.ஆர்.பீ.திசாநாயக்க, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபன தலைவர் மஹில் சேனாரத்ன, மீன் சந்தைத் தொகுதியின் வியாபாரிகள் சங்கத்தலைவர் ஜயசிறி விக்கிரமாராச்சி, செயலாளர் ஜயந்த குரே ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.



செஞ்சோலை சிறுவர் இல்ல மாணவிகளின் ஆவணி மாதத்திற்கான பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வு நேட்டோ நிறுவனத்தலைவர் செ.பத்மநாதன் தலைமையில் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் அண்மையில் இடம்பெற்ற போது மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் கலைநிகழ்வுகளையும் கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம். (63)

# புலமைப்பரிசில் பரீட்சைக்காக மாணவர்கள் நீண்டதூரம் பயணிப்பதா?

## கேள்வி எழுப்புகின்றனர் பெற்றோர்

(வலிகாமம்)

வலிகாமம் வலயத்திற்கு உட்பட்ட யா/குட்டியப்புலம் வித்தியாலயத்திலிருந்து தரம் 5 புலமைபரிசில் பரீட்சைக்காக மாணவர்கள் நீண்ட தூரத்தில் உள்ள குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு சென்று பரீட்சை எழுதுவதால் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாம வலயத்தில் அதிகஸ்ரப்பிரதேச பாடசாலையாக குட்டியப்புலம் பாடசாலை இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த வாரம் மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வடமாகாண கல்வித் திணைக்களம் நடாத்திய 5 ஆம் தர மாதிரிப் பரீட்சைக்கும் பல்த்த சிரமங்களுக்கு மத்தியில் 5 கிலோமீற்றர் தூரம் துவிச்சக்கர வண்டியிலும், நடந்தும் மாணவர்கள் சென்றதாக பெறறோர்கள கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் எந்தவித அரச, தனியார் போக்குவரத்து சேவையும் இடம்பெறாதநிலையில் மாணவர்கள் இவ்வாறு நீண்ட தூரம் பயணம் செய்து பரீட்சைக்கு தோற்றுவது அவர்களுக்கு மேலும் உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் எடுப்பார்களா? எனவும் பெற்றோர் கேள்வி எழுப்புகின்றனர். (66)

# குகனின் "நிதர்சனம்" நூல் வெளியீட்டு விழா

புத்தூர் கு.குகன் எழுதிய "நிதர்சனம்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் இராஜமகேந்திரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் வேல்நம்பி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (85)

# கிளிநொச்சி பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் விடுதிகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி பங்களிப்புடன் ஆயிரம் இடைநிலை பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கிளி/மத்திய கல்லூரி, கிளி/முருகானந்தா கல்லூரி, கிளி/பாரதி வித்தியாலய மகிந்தோதய ஆய்வுகூடங்கள் யாழ். மாவட்டத்தின் வரணி மத்திய கல்லூரியின் பாடசாலை கட்டட தொகுதியும் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

மற்றும் கொரிய அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட கிளி/கோணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி, கிளி/பிரமானந்தா ம.வி.என்பவற்றின் வகுப்பு அறை கட்டட தொகுதியும் முருகானந்தா கல்லூரியில் அமைக்கப்பட்ட ஆசிரிய விடுதி தொகுதியும் நாளை திறந்து வைக்கப்படவுள்ளன.

இவ்வைபவத்தில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பிரதம விருந்தினராகவும் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# நலிவுற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்

(அளவெட்டி)

லண்டனில் வசித்துவரும் அளவெட்டி மக்கள் சங்கத்தின் நிதி அனுசரணையில் கிராமத்திலுள்ள நலிவுற்ற 03 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இச்செயற்றிட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா இரண்டு நல்லின பால்மாடுகள் கன்றுகளுடன் வழங்கப்பட்டிருந்தன. உடனடியாகவே வருமானம பெறத்தக்கதாகவும், எதிர்காலத்தில் மேலும் வருமானத்தினையும் பசுக்களின் எண்ணிக்கையினையும் அதிகரிக்கும் நோக்கிலும் பால்தரும் நிலையில் உள்ள நல்லின மாடுகள் பசுக்கன்றுகளுடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்திற்காக ரூபா 2 இலட்சத்து 32 ஆயிரம் நிதி செலவிடப்பட்டதாகவும் அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் நிதியாளர் வே.சிவராஜா தெரிவித்துள்ளார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பயனாளிகள் தெரிவு தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை அளவெட்டி வடக்கு கிராம அலுவலர் கணேசதாஸ், அளவெட்டி கிழக்கு கிராம அலுவலர் ரவீந்திரன் மற்றும் அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் இராஜகோபாலன் ஆகியோர் வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

இவ்வாறான சமூகநோக்கிலான பயன் தரு திட்டங்களுக்கு அளவெட்டி மக்கள் சங்கத்தினர் (லண்டன்), அளவெட்டி அபிவிருத்தி மன்ற நிர்வாகிகள் மற்றும் கிராம அலுவலர்களும் உதவி வருகின்றனர். (48)

# முரசின் இன்றைய பலன்



(27.07.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 11 ஆம் திகதி.
பிரதமை / சித்தம்.
பூச நட்சத்திரம் பி.ப. 06.56 வரை. பின் ஆயிலியம்.
இராகு காலம் 04.32 - 06.02 வரை. சுபநேரம் 09.02 - 10.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | காரிய சித்திபெறநட்பு வட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்டதால் நன்மை கிட்டுதல், எதிரியின் அடாவடித்தனம் அற்றுப்போய்விட்டதால் பதகளிப்பு நீங்குதல். |
| ரிஷபம் | சகோதரவழியில் தலையிட முயன்றதால் பிரச்சினை உருவாகி உறவு கெடல், குழந்தைப்பாக்கியம் தக்க வைத்த அறிகுறி தென்பட்டதால் மகிழ்வேற்படல். |
| மிதுனம் | விவாகத்தில் இருந்த தடை குறுக்கீடு அகன்றதால் இரு பகுதியாரும் கலப்புக்கு உடன்படல், மார்புச்சளி நோய் தொடர்ந்தும் வருத்துவதினால் தெய்வ சந்நிதியை நாடுதல். |
| கடகம் | சகோதரர் உதவியும் பிதாவின் அரவணைப்பும் ஏற்பட்டதால் வசந்தம் பிறத்தல், பணத்தை எடுத்துச்செல்கையில் போதிய பாதுகாப்பினை ஏற்படுத்த பின்னிற்க வேண்டாம். |
| சிம்மம் | சனிகோசரம் நன்றாக இருப்பதினால் நோய் குணமடையும் அறிகுறி தென்படல், விசாரனையின் பின்னர் வரன் மீது அபிப்பிராயம் நன்றாக இருப்பதினால் விவாகம் செய்யமுஸ்தீபு. |
| கன்னி | நீண்டகாலமாக இழுபட்ட வீசாப்பிரச்சினை நல்ல முடிவினை அளித்தல், நம்பகத்தன்மை நன்றாக இருப்பதினால் புதியன கொள்ள முன்வரல். |
| துலாம் | சச்சரவு ஏற்படும் வேளையில் நியாயத்தை நிலைநாட்டியதால் துயர் விலகுதல், சொந்தத் தொழில் பாரிய நஷ்டத்தைத்தர ஆரம்பித்ததால் பங்கில் சேர ஆதங்கப்படல். |
| விருச்சிகம் | ஏழரைச் சனி நடப்பதினால் தொழிலில் அவதானமாக இருக்க சகஊழியர்களுக்கு அறிவுறுத்தல், மூத்த சகோதரரின் வெளிநாட்டுப் பண உதவியினால் புதிய மனை அமைக்க ஆரம்பித்தல். |
| தனுசு | எதிரிகளின் கை ஓங்கிக்காணப்படுவதினால் பதவிக்கு கேடுவரலாம், நம்பிக்கைக்கு துரோகம் இழைத்தமையை எண்ணி உளத்தாக்கமடைதல். |
| மகரம் | மனையை மெருகூட்டி அழகாக துலங்க வைக்கும் முயற்சியில் ஈடுபடல், கொள்கைப் பிழப்பின்றி வாழத் தலைப்படும் புதல்வியை எண்ணி கவலையுறல். |
| கும்பம் | பிதாவின் தேகநிலை பாதக நிலையை அடைவதை எண்ணி அச்சமடைதல், திருட்டுப்போன பொருள்கண்டு பிடித்த செய்தி அறிந்து மீட்கச்செல்லுதல். |
| மீனம் | குருப்பெயர்ச்சி சாதகமாக இருப்பதினால் கைவிட்டிருந்த பயணம் தொடங்க விரும்புதல், பழைய நிலுவைபெற தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நன்மை பெறுதல். |

# பளுதூக்கலில் இலங்கைக்கு பதக்கம்




ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் பொதுநலவாயப் போட்டிகளில் இலங்கை தனது முதல் பதக்கத்தை சுவீகரித்துள்ளது

இலங்கை குழாத்தின் தலைவராக செயற்படும் சுதேஷ் பீரிஸ் பளுதூக்கும் போட்டிகளில் 62 எடைப்பிரிவின் கீழ் வெள்ளிப்பதக்கத்தை சுவீகரித்தார்.

இதன் மூலம் இலங்கை அணி பதக்கப்பட்டியலில் 13ஆவது இடத்தை அடைந்ததுள்ளது.


இதேவேளை, நேற்றைய தினம் பொதுநலவாயப் போட்டிகளில் புதிய சாதனைகள் சில நிலை நாட்டப் பட்டன மகளிருக்கான 100 மீற்றர் பெக்ஸ்ட்ரொக் நீச்சல் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் இ சீபோம் 59.51 விநாடிகளில் தனது போட்டி நேரத்தை நிறைவு செய்து இவர் சாதனை நிலை நாட்டியமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை ஆடவருக்கான 400 மீற்றர் தனி நபர் மெட்லி நீச்சல் போட்டியில் ஸ்கொட்லாந்தின் டென்னி வொல்லஸ் சாதனை படைத்ததோடு ஆடவருக்கான 10 மீற்றர் குறி பார்த்து சுடும் போட்டியில் இங்கிலாந்தின் டெனியல் ரிவர்ஸ் புதிய சாதனையொன்றை நிலை நாட் டினார் பதக்கப்பட்டியலில் இங்கிலாந்து தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளது

பதக்கப்பட்டியலில் இங்கிலாந்து 12 தங்கப் பதக்கங்களுடன் 32 பதக்கங்களைக் கைப்பற்றி முத லிடத்தில் உள்ளது.

இதேவேளை, அவுஸ்ரேலியா 11 தங்கப்பதக்கங் களு டன் இரண்டாம் இடத்திலும் ஸ்கொட்லாந்து 7 தங்கப்பதங்களுடன் மூன்றாம் இடத்திலுமுள்ளன.

நான்காம் இடத்தை நான்கு தங்கப்பதக்கங்களுடன் கனடா கைப்பற்றியுள்ளதோடு இந்தியா மூன்று தங்கப்பதக்கங்களுடன் ஐந்தாம் இடத்திலுள்ளது.



## பணக்கார விளையாட்டு வீரர் டோனிக்கு ஐந்தாமிடம்

உலகின் பணக்கார விளையாட்டு வீரர்கள் பட்டியலில் இந்திய அணிக் கப்டன் டோனிக்கு 5ஆவது இடம் கிடைத்துள்ளது.

போர்பஸ் பத்திரிகை ஆண்டு தோறும் உலகின் பணக்கார விளையாட்டு வீரர்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இந்தப் பட்டியலானது வீரர்களுக்கு போட்டி மூலம் கிடைக்கும் பணம் மற்றும் விளம்பரம் மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றை வைத்து தயார் செய்யப்படுகிறது.

முன்பு இந்தப் பட்டியலில் ஆதிக்கம் செலுத்தி வந்தவர் சச்சின். ஆனால் தற்போது அவர் ஓய்வு பெற்று விட்டதால் அவருக்கு அடுத்ததாக டோனி ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விட்டார்.

2013ஆம் ஆண்டில் அதிக பணம் சம்பாதித்து உள்ள விளையாட்டு வீரர்களில் உலக அளவில் டோனி ரூ.126 கோடி சம்பாதித்து 5ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

கால்பந்து வீரர்களில் பணக்கார வீரர்களாக திகழும் மெஸ்ஸி, ரொனால்டோவையே டோனி ஓரம்கட்டிவிட்டார்.

17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), கோல்ப் வீரர் டைகர் உட்ஸ் ஆகியோர் தலா ரூ.276 கோடி சம்பாதித்து முதல் இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

கூடைப்பந்து வீரர் லெப்ரான் ஜேம்ஸ், பில் மிக்கெல்சன் ஆகியோர் முறையே, 2 மற்றும் 3ஆவது இடங்களைப் பிடித்துள்ளனர்.


பிரபல ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா 4ஆவது இடத்தையும், ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட் 6ஆவது இடத்தையும் பிடித் துள்ளனர்.

## சானியா ஆவேசம்

மேற்கிந்தியத்தீவில் நடைபெற்று வரும் கரீபியன் லீக் போட்டியில் பார்படோஸ் டிரைடென்ட்ஸ் அணிக்காக விளை யாடி வரும் பாகிஸ்தானை சேர்ந்த மலிக்குக்கு எதிராக செயின்ட் லூசியா ஜோக்ஸ் அணிக்காக விளையாடும் மேற்கிந்தியத்தீவு வேகப்பந்து வீச்சாளர் டினோ பெஸ்ட் பந்து வீசுகையில் இருவருக் கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம், தள்ளு முள்ளில் முடிந் தது. இருவருக்கும் இடையிலான இந்த உரசல் விடுதி அறை வரை நீடித்தது. இந்த நிலையில் தெலுங்கானா தூத ராக நியமிக்கப்பட்டு சர்ச்சையில் சிக்கிய இந்திய ரென்னிஸ் வீராங் கனை சானியா மிர்சா, தனது கணவர் மலிக்குக்கு ஆதரவாக டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார்.

அதில், கிரிக்கெட் ஆடுகளத்தில் இன பாகுபாடா? இது கேவலமாக இருக்கிறது. மலிக் அடிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவரை டினோ பெஸ்ட்டை அடித்து இருக்க லாம். டினோ பெஸ்டின் செயல் முட்டாள்தனமானது என்று காட்ட மாகத் தெரிவித்துள்ளார்.

## மூன்றாவது டெஸ்ட் இன்று




(லண்டன்)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று இங்கிலாந்தின் சௌத்தம்பில் நடைபெறவுள்ளது. ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

மூன்றாவது போட்டியில் வெற்றிபெறுவோம் என இங்கிலாந்து அணியின் கப்டன் குக் தெரிவித்துள்ளார். கடந்த இரு போட்டிகளில் நாங்கள் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றோம். அதிலிருந்து நிறைய பாடங் க்ளை நாம் கற்றுள்ளோம். லோட்ஸில் ஏற்பட்ட தோல் விக்கு துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பலான ஆட்டம் ஒரு காரணமாக இருந்ததை ஏற்றுக் கொள்கின்றோம். நான் உட்பட எவரும் பொறுப்புடன் ஆடவில்லை. ஆனால், அடுத்து வரும் போட்டிகளில் அணியாக எமது திறமைகளை வெளிப்படுத்துவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இப்போட்டியில் இந்திய அணி வெற்றிபெறும் பட்சத்தில் தொடரை இழக்காது பாது காத்துக் கொள்ள முடியும். ஒட்டுமொத்தத்தில் இப் போட்டி இரு அணிகளுக்கும் சவால் நிறைந்ததொரு ஆட்டமாக அமையும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## சவால் நிறைந்த டெஸ்ட் தொடர்




(சிட்னி)

இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடர் சவால் நிறைந்ததாக இருக் கும். டெஸ்டில் வலுவான அணியைக் கொண்டிருக்கும் இந்திய அணியை நாங்கள் இலகுவாக எடுத்துக்கொள்ளவில்லை. சொந்த மண்ணில் இத்தொடர் நடைபெறவிருப்பதால் நிச்சயம் அது எங்களுக்கு சாதகமா-கவே அமையும். அதன் மூலம் தொடரை வெல்ல முடியும் என்று நம்புகின்றேன் என அவுஸ்ரேலிய அணி கப்டன் மைக்கல் கிளார்க் தெரி வித்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட்டுக்காக இன்னும் நிறைய சாதிக்க வேண்டியுள்ளது. இந்தக் கோடையில் எங்கள் நாட்டிற்கு இந்திய அணி வருகின்றது. மிகவும் கடினமான ஒரு டெஸ்ட் அணி இந்தியா. அதன் பின்னர் இங்கிலாந்துக்குச் செல்கிறோம், ஆகவே நிறைய கடினமான தொடர்கள் இன்னமும். உள்ளன. இந்த சவால்களை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு கூட்டு முயற்சி அவசியம். அதனை நாங்கள் தற்போது வளர்த்து வருகின்றோம்.

எனது துடுப்பாட்டத்தில் இன்னும் நிறைய சாதிக்க வேண்டியுள்ளது. எனது ஆட்டம் மங்கத் தொடங்கும்போது நான் தேர்ந்தெடுத்த இந்த ஆட்டத்திலிருந்து விடைபெறுவேன் எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

## எஸ்.எஸ்.சி.யில் இலங்கை முன்னிலை



### போராடி சதமடித்தார் அம்லா

(கொழும்பு)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது. இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக மூன்று விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை தென்னாபிரிக்க அணி தொடர்ந்தது. ஒரு முனையில் கப்டன் அம்லா பொறுப்புடன் ஆடியபோதும் மறுமுனையில் தென்னாபிரிக்க அணியின் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிக்கப்பட்டன. இதில் வில்லியர்ஸ், ஸ்ரெய்ன் ஆகியோர் ஓரளவு தாக்குப் பிடித்தபோதும் ஏனைய வீரர்கள் விரைவாக ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். மறுமுனையில் சிறப்பாக ஆடிய கப்டன் அம்லா சதமடித்து அசத்தினார். இறுதியில் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 282 ஓட்டங்கபைப் பெற்றது. இதில் கப்டன் அம்லா 382 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 139 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் அம்லா பெற்ற 22ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் டிவில்லியர்ஸ் 37, ஸ்ரெய்ன் 30, டு பிளசீஸ் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். பெரேரா ஐந்து, ஹேரத் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

139 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இலங்கை முதல் இனிங்ஸ் 421.

## விளையாட்டுச் செய்திகள்

### இளவாலை ஹென்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் மாபெரும் கால்பந்து

# கிண்ணம் வென்றது குருநகர் பாடுமீன்

(இளவாலை)

இளவாலை ஹென்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை குருநகர் பாடுமீன் அணி கைப்பற்றிக் கொண்டது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் குருநகர் பாடுமீன் அணியும், நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதின.

இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் விளைவாக இறுதி வரை இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பாடுமீன் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.



இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் ஊரெழு றோயல் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஊரெழு றோயல் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93,48)

# இன்றைய ஆட்டம்

(பருத்தித்துறை)

அமெரிக்க பயிற்றுநர் குழாம் மற்றும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் ஒழுங்கமைப்புடன் நடைபெறும் கால்பந்தாட்ட பயிற்சி பாசறை நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வு இன்று மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி பாசறை நிறைவில் வதிரி டையமன்ஸ் அணிக்கும் இலங்கை இராணுவ தேசிய அணிக்குமிடையில் காட்சிப் போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளதாக ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் தலமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வகுமாரி நேசரட்ணம், வலிகாம உதவிக் கல்விப்பணிப்பாளர் றூபா உதயரட்ணம், சிறுவர் மேம்பாட்டு அலுவலர் எம்.பத்மராஜ், பிரதேச சபை உறுப்பினர் அ.ஜெபநேசன் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (48,92)

(அச்சுவேலி)

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. பரமானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் விருந்தினர்களாக க. கமலதாசன், க. விமலதாசன், இ. தெய்வேந்திரம், பா. செந்தூரன், பொ. நிசாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (85)

(அச்சுவேலி)

கரணவாய் தெற்கு விபுலானந்தர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் கு. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை தவிசாளர் பொ. வியாகேசு, கௌரவ விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. பொன்னையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (85)



மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட வீஸ்ரார் அணியைக் காணலாம். வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் கைதடி வளர்மதி அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (51)

### மாவட்ட மட்டத்தில் தாச்சி

# நவாலி சென். றொக் 2ஆவது சுற்றுக்கு தகுதி

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாவட்ட அணிகளுக்கிடையிலான தாச்சிப் போட்டியின் முதல் ஆட்டத்தில் நவாலி சென். றொக் அணி அபார வெற்றிபெற்றது.

யாழ். மாவட்ட தாச்சி சங்கம் 18ஆவது வருடமாக நடாத்தி வரும் இப்போட்டித் தொடர் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கைதடி விநாயகர் அணியும் சென். றொக் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நவாலி சென். றொக் அணி 8-6 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி அடுத்த மாதம் 31ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 22இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கு கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆவரங்கால் இந்து, இளவாலை மத்தி

# கரப்பந்தில் சம்பியன்



(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடாத்திய கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் மற்றும் இளவாலை மத்தி அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

ஏ, பி என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் விலகல் முறையில் நடைபெற்றது.

ஏ பிரிவுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதிக் கொண்டன. ஆரம்பம் முதலே அசத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பி பிரிவுக்கான இறுதிப் போட்டியில் இளவாலை மத்தி அணியும் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இளவாலை மத்தி அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

# ஆண்டு நிறைவு கிண்ணம் நாமகள் வசம்

(அராலி)

அராலி திருமகள் விளையாட்டுக்கழக 34ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை தெல்லிப்பளை நாமகள் அணி கைப்பற்றிக் கொண்டது. கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் 32 அணிகள் பங்குகொண்டன. விலகல் முறையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 20ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு அராலி திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் தெல்லிப்பளை நாமகள் அணியும் மாதகல் சென். தோமஸ் யூத் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை நாமகள் அணி கோல் மழை பொழிந்து அசத்தியது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சென். தோமஸ் யூத் அணி செயற்பட்டபோதிலும் நாமகள்

அணியின் பிற்கள வீரர்களின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் தவிடுபெடியாக்கப்பட்டது. இறுதியில் தெல்லிப்பளை நாமகள் அணி 7-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக கனிஸ்ரன், சிறந்த விளையாட்டு வீரனாக யசீலன், சிறந்த கோல் காப்பாளராக சரன்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (48)





# பாரம்பரிய கலைகளின் திருவிழா

எழில் கொஞ்சும் மட்டு மாநகரின் மாமாங்கப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த உற்சவம் இம்முறையும் களைகட்டியது. தொந்திக் கணபதியின் நிறைவான அருளைப்பெற நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரள் திரளாக வழமை போல வந்து கூடினர். மக்கள் சாதி, மதம் மறந்து சமூக இணைப்பாட்டில் இரண்டறப் பின்னிப் பிணையும் ஒரு சுதந்திர சுமுகமயமான ஒரு சூழலை இத்திருவிழா ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

கடந்த மூன்று வருடங்களாக கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரால் மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் "பாரம்பரிய அரங்க ஆற்றுகையும், பாரம்பரிய அரங்க காட்சிக்கூடமும்" என்ற தொனிப் பொருளில் மேற்கொள்ளப்பட்ட பாரம்பரிய கலைகளின் திருவிழாவானது இம்முறையும் 20.07.2014 முதல் 24.07.2014 வரை வெற்றிகரமாக அளிக்கை செய்யப்பட்டது.

கோலாகலமாக காண்பியமாக்கப்பட்ட பாரம்பரிய ஆற்றுகையும், பாரம்பரிய காட்சிக்கூடமும் பாரம்பரிய கலைகளின் சமகால தேவைப்பாடுகளையும் அதன் முக்கியத்துவத்தினையும் அறிந்து கொள்ள உதவியதோடு நுண்கலைத்துறை மாணவர்களது கல்விச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கும் ஏற்ற பொருத்தமானதொரு நிகழ்வாக அமைந்தது எனலாம்.

நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களின் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்ட இவ்விழாவானது பல்வேறு நிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்டமைந்திருந்தது. இந்நிகழ்வுகள் காண்போரை கவரச் செய்ததோடு இத்திருவிழாவினையும் கூடியிருந்த மக்களையும் மென்மேலும் உற்சாக மூட்டியது.

பாரம்பரிய அரங்கக் காட்சிக்கூடமானது பாரம்பரிய வாத்தியக்கருவிகளையும், பாரம்பரிய புகைப்படங்களையும், கூத்தர் உருவங்கள் மற்றும் கூத்து ஆடை அணிகலன்கள் என்பனவற்றையும் கொண்டமைந்திருந்தன.

குறிப்பிடத்தக்க மற்றொரு முக்கிய விடயம் கூத்துக் களரி. களரி அமைத்தல் என்பது மிக இலகுவான விடயமல்ல. சரியான அளவைக் கொண்டு கட்டப்பட வேண்டிய ஒரு அரங்க நிர்மாணக்கலை என்றே கூற வேண்டும். அவ்வகையில் மிக அழகாக, நேர்த்தியாக கட்டப்பட்ட இவ்வட்டக் களரியானது கோயிலின் முற்றத்திலே ஒரு மங்கள உணர்வை ஏற்படுத்திக் கொண்டே இருந்ததோடு அவ்வட்டக் களரியிலே தான் பாரம்பரிய ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டன.

பகல் நேர நிகழ்வுகளாக புலிக்கூத்து, தப்பாட்டம், உடுக்குச் சமர், மத்தளக் கச்சேரி, பறை முழக்கம் போன்ற பாரம்பரிய நிகழ்த்துகைகளும், முழு நேர இரவுக் கூத்துக்களான பவளக்கொடி, அர்ச்சுணன் தவநிலை போன்ற வட மோடிக்கூத்துக்கள், தென் மோடிக்கூத்து, கொம்புமுறி காட்சிப்படுத்தல் என்பன நிகழ்த்தப்பட்டன.

இந்நிகழ்வுகள் அனைத்தும் எம்மை எம் பாரம்பரிய மரபுக்குள் இட்டுச் செல்வதோடு பாரம்பரிய கலை வடிவங்களின் தேவைப்பாட்டினை, அதன் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. கூத்து ஆற்றுகைகளுக்கு முன்வரத் தயங்கும் பெண்களுக்குத் தாமும் இதுபோன்றதொரு ஆற்றுகைகளை நிகழ்த்த வேண்டும் என்ற அவாவை இவ்வரங்க ஆற்றுகைகள் நிச்சயம் உருவாக்கிவிடும்.

அத்தோடு இப்பாரம்பரிய கலைத் திருவிழாவின் ஆரம்பத்தில் கலைஞர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அண்ணாவிமார், கூத்தின் வாத்தியக் கருவிகளை உருவாக்குபவர்கள், உடை ஒப்பனை செய்பவர்கள், கூத்திற்கான சதங்கைகளை வழங்குபவர்கள் என இப்பட்டியல் நீண்டு செல்கின்றது. இது ஒரு சிறப்பம்சமாகும். இந்நிகழ்வானது இவர்களுக்கு சமூகத்தில் ஒரு சம அந்தஸ்தினையும், கௌரவத்தினையும் பெற்றுத்தருவதாக அமைகின்றது. நிகழ்வினை ஒழுங்கமைத்த கிழக்குப்பல் கலைக்கழக நுண்கலைத் துறையினருக்கும், கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் நன்றி கூற வேண்டும்.


இப்பாரம்பரிய கலைத் திருவிழாவானது கலாநிதி வ.இன்பமோகன் (நுண்கலைத்துறை தலைவர்) அவர்களின் தலைமையில், கலாநிதி சி.ஜெயசங்கர் (சிரேஷ்ட விரிவுரையாளர்) அவர்களின் ஒழுங்கமைப்பில், விரிவுரையாளரான சு.சந்திரகுமார் மற்றும் உதவி விரிவுரையாளர்களின் இணைப்புடன் நுண்கலைத்துறை மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத் துறை பொறுப்பேற்றது.

இன்றைய இளைஞர் யுவதிகளே! பாரம்பரியங்கள் மறுக்கப்பட வேண்டியதல்ல. மாறாக அவை போற்றப்பட வேண்டியவை. பேணப்பட வேண்டியவை. எமது அடுத்தடுத்த சந்ததியினருக்கு எம் மூத்த கலைகளைக் கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

தொகுப்பு:
**குழந்தைவேல் ஞானவள்ளி**

# உக்ரேன் நெருக்கடியும் மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதும்

**- அ.மார்க்ஸ் -**



மலேசிய விமானம் ஆர் 17 சுட்டு வீழ்த்தப்பட்டு மக்கள் பலியாகியுள்ளது எல்லோருக்கும் கவலை அளிக்கும் செய்தி.. விலை மதிக்க முடியாத 298 உயிர்கள் பலியானது தவிர உலக அளவில் அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்படுமோ என்கிற அச்சத்தையும் இந்த நிகழ்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

பயணிகள் விமானத்தை வீழ்த்தியது யார் என்பது உறுதியாக இதுவரை கண்டுபிடிக்கப் படாதபோதும், ரஷ்ய ஆதரவு கிரீமியப் போராளிகளே இதற்குக் காரணம் என்கிற கருத்து இன்று பலமாக முன்வைக்கப்படுகிறது. குறிப்பாக அமெரிக்காவும் இதர நேட்டோ நாடுகளும் இப்படிச் சொல்லுகின்றன. ஏற்கனவே கிரீமியப் பிரச்சினையைக் காரணம் காட்டி ரஷ்யா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை இன்னும் அதிகமாகலாம் எனக் கூறப்படுகிறது.

உக்ரேன் அரசு இன்னும் ஒருபடி மேலே போய் ரஷ்யப் படைகளே நேரடியாக இதைச் செய்திருக்க வேண்டும் என்கிறது. ஆனால் இதற்கான எந்த ஆதாரத்தையும் அதனால் தர இயலவில்லை. இன்னொரு பக்கம் கிரீமியப் போராளிகள் இதை உக்ரேன் அரசுதான் செய்திருக்க வேண்டும் என்கின்றனர். ஆனால் இதை யாரும் நம்பத் தயாராக இல்லை.

ஆர் 17 விமானம் 30,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது அதைச் சுட்டு வீழ்த்த வேண்டுமானால், தீவிரமான ரேடார் தொழில் நுட்பமும் அதற்குரிய ஏவுகணைக் கருவிகளும், அவற்றை இயக்கும் பயிற்சியும் தேவை. கிரீமியப் போராளிகளுக்கு ரஷ்யா பயிற்சி அளிப்பது உண்மைதான். ஆனால் ஒரு இரண்டு வாரப் பயிற்சி இதற்கெல்லாம் போதாது. உக்ரேனிய இராணுவத்திலிருந்து பிரிந்து வந்து போராளி அமைப்புகளில் இணைந்தவர்கள் இதைச் செய்திருக்கலாம் என்றொரு கருத்தும் உண்டு.

சென்ற சில நாட்களில் உக்ரேன் எல்லை மீது பறந்துகொண்டிருந்த நான்கு விமானங்கள் இவ்வாறு சுட்டு வீழ்த்தப்பட்டன. மற்ற மூன்றும் போர் விமானங்கள். இதில் இரண்டைச் சுட்டு வீழ்த்தியதற்கு போராளிகள் உரிமை கோரியுள்ளனர். ஆனால் இவை தாழப் பறந்தவை. சாதாரணத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் அதிகப் பயிற்சி இல்லாதவர்களும் இதைச் செய்ய முடியும். ஆனால் மலேசிய விமானம் உட்பட மற்ற இரு விமானங்களையும் தாங்கள் சுடவில்லை எனப் போராளிகள் சொல்கின்றனர்.

நடுநிலை விசாரணை ஒன்றை ஏற்றுக்கொண்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி புட்டின், "கிரீமியாவில் அமைதி நிலைநாட்டப் படுவதற்குக் தடையாக இருந்தவர்களே இதற்குப் பொறுப்பு" என்றுள்ளார். அதாவது உக்ரேனிய அரசும் அதற்கு ஆதரவாக உள்ளவர்களுமே காரணம் என்கிறார்.

உக்ரேனின் கிழக்குப் பகுதியில் உள்ள கிரீமியாவும் செவஸ்டாபோலும் ரஷ்ய மொழி பேசுபவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகள்.. சென்ற பெப்ரவரியில் உக்ரேனில் நடைபெற்ற ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை ஒட்டி இப்பகுதிகள் ' ரஷ்யாவுடன் இணைய விருப்பம் தெரிவித்தன. ஒரு வாக்கெடுப்பு நடத்தி 90 சதத்திற்கும் மேற்பட்டோர் இந்தக் கருத்தை ஆதரித்து ரஷ்யாவுடன் சேர்வதாக அறிவித்த போதும் நேட்டோ நாடுகளும் ஐ.நா.வும் இதை ஏற்கவில்லை. எல்லை ஓரங்களில் ரஷ்ய மற்றும் உக்ரேனியப் படைகள் குவிக்கப்பட்டுள்ள பின்னணியில்தான் இன்று இந்த மலேசிய விமானம் பயணிகளோடு சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது..

எப்படி ஆயினும் பயணிகள் விமானத்தைச் சுட்டுவீழ்த்தி மக்கள் கொல்லப்படுவது கண்டிக்கத் தக்கது. இதுவரை வரலாற்றில் குறைந்த பட்சம் ஏழு முறை இப்படி நடந்துள்ளன. இதில் 1988இல் அமெரிக்கா சுட்டு வீழ்த்திய ஈரானிய விமானமும் அடக்கம். இதிலும் 290 பேர்கள் கொல்லப்பட்டனர்.

போரும், ஆயுதப் போராட்டங்களும் மக்களின் உயிர்களை மதிப்பதில்லை. தேச இறையாண்மை என்கிற பெயர்களில் அரசுகளும், நாட்டு விடுதலை என்கிற பெயர்களில் போராளிகளும் இப்படியாக ஆயுதம் தரிக்காத மக்களின் கொலைகளை நியாயப்படுத்துவதை ஏற்க இயலாது. எல்லாவற்றையும் கொள்கைகளைச் சொல்லி நியாயப்படுத்திவிட இயலாது.

# நூறு ஆண்டு கடந்த கடிதம்!

கிரீஸ் நாட்டின் வடக்கு நகரமான போல்டிக், கடற்கரை நிறைந்த பிரதேசம். இங்குள்ள மீனவர் ஒருவர், வழக்கம் போல், கடலுக்கு மீன் பிடிக்க சென்றார்.



அன்று மீன்களுடன், ஒரு பழைய பியர் போத்தலும் கிடைத்தது. அதனுள், ஒரு அஞ்சல் அட்டை இருந்தது. 101 ஆண்டுகளுக்கு முன், ஒருவர் தன் பேத்திக்கு எழுதிய கடிதம் அது. கடிதத்தில் குறிப்பிட்டு இருந்த பேத்தி, அஞ்சலா எட்மான், தற்போது ஜெர்மனியில் பெர்லின் நகரத்தில் வசிக்கிறார். இவரின் தாத்தா ரிச்சர்ட் பிளாட்ஸ், கடந்த, 1946இல் மரணமடைந்த தகவல், பேத்திக்கு தெரியவில்லை. கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம் பெற்ற இந்த நூறு வயது கடிதம், தற்சமயம், ஹம்பேர்க் அருங்காட்சியகத்தில் இருக்கிறது.

# 80 வயதில் ஜெயகாந்தன்

நேர்காணல்:- சமஸ்



ஜெயகாந்தனின் 80ஆவது பிறந்த நாள் விழா. எழுத்தாளர்களை அவர்கள் காலத்தில் பொருட்படுத்தாமல் அலட்சியப்படுத்திவிட்டு, காலம் கடந்த பின்பு உச்சுக்கொட்டும் வருத்தமூட்டும் மரபுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விழா. ஜெயகாந்தனை ஒட்டுமொத்தத் தமிழுலகுக்கும் கொண்டுசென்ற “விகடன்”, 50 ஆண்டுகளுக்கு முன் அவர் எழுதிய படைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்பை நூலாக வெளியிடுகிறது. அன்றைக்கு எந்த வடிவத்தில் வெளியாயினவோ, அதே அச்சு வடிவில், அப்போது வெளியான அதே ஓவியங்களுடன், அதே வடிவமைப்புடன் மீண்டும் வெளியாகின்றன, ஜெயகாந்தன் கதைகள்! வெளியிடுபவர் விகடன் குழுமத் தலைவர் எஸ்.பாலசுப்ரமணியன்.

● **இந்த வயதில், இன்றைய சூழலில் ஜெயகாந்தனின் ஒருநாள் எப்படி இருக்கிறது?**

நீங்கள் அந்த வயது, அந்தச் சூழல் என்று எதை நினைத்துக் கேட்கிறீர்களோ, அப்போது இருந்த மாதிரித்தான் இந்த வயதில், இந்தச் சூழலிலும் ஒருநாள் இருக்கிறது. ஒரே ஒரு வித்தியாசம், அன்றைக்கு நான்கு மணிக்குப் பொழுது விடிந்தபோது, எனக்கும் நான்கு மணிக்கு விடிந்தது. இன்றைக்கு நான்கு மணிக்குப் பொழுது விடியும் போது, எனக்கு எட்டு மணிக்குத்தான் தெரிகிறது.

● **கோடைக் காலத்தில் பகல்களையும், மழைக் காலத்தில் இரவுகளையும் நீண்டதாக உணர்கிறோம். அதுபோல, இளமையில் ஒருநாளை உணர்வதற்கும் முதுமையில் ஒரு நாளை உணர்வதற்கும் வேறுபாடு ஏதும் தெரிகிறதா?**

இளமையில் ஒரு நாள் பொழுது என்பதைச் சின்னதாக உணர்ந்திருக்கிறேன். முதுமையில் அது இன்னமும் சின்னதாகத் தெரிகிறது.

● **தமிழில் வேறு எந்தப் படைப்பாளிக்கும் கிடைக்காத சம கால மரியாதை - உங்கள் ஞானகுரு பாரதிக்கும் கூடக் கிடைக்காதது - உங்களுக்கு மட்டும் வாய்த்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

சாமானிய மக்களுடைய வாழ்க்கையை எழுதியதும், அந்த எழுத்தோடு ஒட்டி வாழ்ந்ததும் [illegible]ணம் என்று நினைக்கிறேன்.

● **ஊடகங்கள் எல்லாக் காலங்களிலும் கொண்டாடிய, கொண்டாடும் ஒரே தமிழ் எழுத்தாளர் நீங்கள். ஊடகங்களோடு உறவாடுவதில் சூட்சமம் ஏதும் இருக்கிறதா?**

என் எழுத்தினால் நின்றேன் என் எழுத்தின் மீது நான் நிற்கிறேன். இதுதான் ஒரே சூட்சமம். யாரிடமும் நான் மண்டியிட்டுக் கைகூப்புவது கிடையாது.

● **ஆரம்ப காலத்தில் சிறுபத்திரிகைகளே உங்கள் களம். சிறுபத்திரிகைகளில் தீவிரமான வாசிப்புத் தேடல் கொண்ட ஒரு சின்னக் கூட்டத்துக்கு எழுதுவதற்கும் வெகுஜனப் பத்திரிகைகளில் பரந்துபட்ட வாசகர்களுக்கு எழுதுவதற்கும் என்ன வேறுபாடுகளை உணர்ந்தீர்கள்?**

வெகுஜனப் பத்திரிகைகள்தான் என்னை மக்களிடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தன என்றாலும், வெகுஜனப் பத்திரிகைகளிடம் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்தவை சிறுபத்திரிகைகள்தான். சிறுபத்திரிகைகளில் நான் எழுதிய எழுத்துகள் பிடித்திருந்ததால்தானே வெகுஜனப் பத்திரிகையாளர்கள் என்னைத் தங்களவன் ஆக்கிக்கொண்டார்கள்? என் எழுத்து என்றைக்கும் ஒரே எழுத்துதான். ஊடகங்கள் அதில் எந்த மாற்றத்தையும் உருவாக்கவில்லை.

● **ஆனால், பத்திரிகை ஆசிரியர்கள் திருத்தங்களை வலியுறுத்தும்போது ஏற்றுக்கொண்டிருப்பீர்கள் இல்லையா? அப்படியான திருத்தங்கள் கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் எழுத்துக்களில் மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கும் இல்லையா?**

நான் மூர்க்கன் இல்லை. இது பரஸ்பரப் பகிர்தல். என்னிடமிருந்து அவர்களும் அவர்களிடமிருந்து நானும் கற்றுக்கொள்வது. நிச்சயமாக அந்தத் திருத்தங்கள் எழுத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால், ஒருபோதும் எழுத்துக்கு விரோதமான திருத்தங்களுக்கு நான் செவிசாய்த்ததில்லை.

● **ஊடகங்களுடனான உங்களுடைய உறவில் ஓர் எழுத்தாளருக்கும் பத்திரிகையாளருக்குமான உறவு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைப்பது எந்தப் பத்திரிகையை, எந்தப் பத்திரிகை ஆசிரியரை?**

விகடனை. அதன் அன்றைய ஆசிரியர் எஸ். பாலசுப்ரமணியனை.

● **உங்கள் ஆரம்ப கால எழுத்துக்கள் என்ன வடிவத்தில் இருந்தனவோ, அதே வடிவத்தில்தான் கடைசிக் கால எழுத்துக்களும் இருந்தன. நீங்கள் கொஞ்சம்கூட உங்கள் எழுத்து நடையை மாற்றிக் கொள்ளாததைப் புதிய மாற்றங்களுக்கு ஜெயகாந்தன் முகங்கொடுக்கத் தயாராகவில்லை என்று எடுத்துக்கொள்ளலாமா?**

ஜெயகாந்தனின் எழுத்துக்களை ஜெயகாந்தனே விமர்சிக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். இந்த விமர்சனமெல்லாம் மற்றவர்கள் வேலை. தங்களை விமர்சகர்கள் என்று கருதிக்கொள்பவர்கள் வேலை.

● **தமிழ் இலக்கியத்தில் 1990இற்குப் பிறகு ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்தது. ஒரு புதிய படையே உள்ளே புகுந்தது. தமிழ் நவீன இலக்கியத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசென்றது. ஆனால், நீங்கள் அதுபற்றியெல்லாம் மூச்சுவிடவே இல்லை. அந்தக் காலகட்டத்தில், உங்கள் மொழியில் புதிதாக எழுத வந்தவர்களைப் பற்றி ஒரு மூத்த படைப்பாளியான நீங்கள் ஏதுவும் பேசவில்லை. ஜெயகாந்தன், காலத்தின் வீட்டுக்குள் சென்று, எல்லாக் கதவுகளையும் பூட்டிக்கொண்டு, ஊரே இருண்டு கிடக்கிறது என்று சொல்கிறார் என்ற விமர்சனம் உங்கள் மீது உண்டு...**

சரியில்லை.

● **எது சரியில்லை, விமர்சனமா, ஜெயகாந்தன் காலத்தின் எல்லாக் கதவுகளையும் பூட்டிக்கொண்டதா?**

ஜெயகாந்தன் பூட்டிக்கொண்டது சரியில்லை. ஜெயகாந்தன் அப்படிச் செய்திருக்கக் கூடாது.

● **இன்றைக்கு உங்களுக்குப் பிடித்த தமிழ் எழுத்தாளர் யார்? என்ன காரணம்?**

இன்றைக்கும் எனக்குப் பிடித்த தமிழ் எழுத்தாளர் மௌனி. நான் மொழியை ஆர்ப்பாட்டமாகப் பயன்படுத்தினேன் என்றால், அவர் ரகசியமாகப் பயன்படுத்தியவர். அதுதான் காரணம் என்று நினைக்கிறேன்.

● **இளமையில் மரணத்தைப் பார்ப்பதற்கும் முதுமையில் மரணத்தைப் பார்ப்பதற்கும் வேறுபாடு இருக்குமல்லவா? ஆஸ்பத்திரியில் உயிர்ப் போராட்டத்தை எதிர்கொண்டபோது மரணத்தை எப்படிப் பார்த்தீர்கள்?**

அந்த நினைப்பே வரவில்லை. ஏதோ ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறோம், மருந்து மாத்திரை கொடுக்கிறார்கள், உடம்பு சரியானதும் வீட்டுக்குப் போய்விடுவோம் என்று நினைத்தேன். அதேபோல, உடம்பு சரியானதும் வீட்டுக்கு வந்துவிட்டேன். மரணத்தின் மீது எந்தப் பயமும் இல்லை.

● **என்ன கடமைகள் மீதி இருப்பதாக நினைக்கிறீர்கள்?**

இந்தப் பிறப்புக்கு என் கடமைகளை முடித்து விட்டதாகவே நினைக்கிறேன்.

● **உங்கள் வாசகர்களுக்குச் சொல்ல சிறப்புச் செய்தி உண்டா?**

ஞானகுரு பாரதி அன்றைக்குச் சொன்னதுதான் என்றைக்கும் என் செய்தி: ஊருக்கு நல்லது சொல்ல வேண்டும், உண்மையைச் சொல்ல வேண்டும். ஒரே வேண்டுகோள்: தமிழையும் படியுங்கள், தமிழுக்கு நல்லது!

---

# கூந்தல் குறிப்புகள்



☯ தலைக்குக் குளிப்பதற்கு முன்பு தலைமுடியைச் சீப்பு கொண்டு நன்கு வாரிவிட வேண்டும். இதனால் சிடுக்கோடு தலைக்குக் குளித்த பின்பு ஏற்படும் சிடுக்கும் சேர்ந்து முடி அதிகம் உதிராமல் காக்கும்.

☯ முதலில் தண்ணீர் ஊற்றும்பொழுது உச்சந்தலையில் பட்டு தண்ணீர் கீழே வரும்படி ஊற்ற வேண்டும். வெந்நீரில் குளித்தால் பாதத்தில் தொடங்கி கடைசியில் தலைக்குத் தண்ணீர்விட வேண்டும்.

☯ ஷாம்புவைக் கை விரல்களினால் எடுத்துக்கொண்டு முடியின் வேர்க்கால்களில் படும்படி அனைத்து இடங்களிலும் தடவி தேய்க்க வேண்டும். இதனால் முடிக்குத் தேவையான விற்றமின் கிடைக்கிறது.

☯ கூந்தலில் உள்ள தண்ணீரை நேராகப் படிய பிழிந்துவிட வேண்டும். முடியைத் துணியுடன் சேர்த்து முறுக்கியோ, வளைத்தோ பிழியக் கூடாது.

☯ கடினமான துண்டு, அதிக சூடு, அதிக துவட்டல் இவை கூந்தலை சீக்கிரமாக பாழடையச் செய்துவிடும்.


☯ தலையில் ஒவ்வொரு முடியிலும் உள்ள ஈரப்பதத்தைவிட முடிகளுக்கிடையே உள்ள ஈரம்தான் அதிகமிருக்கும். அதனால் முடியைப் பிரித்தவாக்கில் பிடித்துக்கொண்டு, மெல்லிய துண்டு பயன்படுத்தி துவட்ட வேண்டும். முடியின் அடி நுனியில் விரல்களால் பிரித்துவிட்டுக் காய வைக்க வேண்டும்.

☯ தலைக்குக் குளித்து முடித்த பின் அவசரமாகத் துண்டை, தலையில் சுற்றிக்கொண்டு வலம் வந்து கொண்டிருந்தால் ஒரு இலட்சம் தடவை முடியைத் துவட்டினால் என்ன பாதிப்பு வருமோ அந்த அளவுக்கு முடிக்குக் கெடுதல் நேருகிறது. முடி அதிக சிக்கல் உண்டாகி சீக்கிரம் உடைந்துவிடும். எனவே துண்டினால் முடியைச் சுற்றி வைக்கக் கூடாது.

☯ முடியை நன்கு காய வைத்த பின்பு தலைமுடியை வாரிவிட வேண்டும். நல்ல அகலப் பற்கள் கொண்ட சீப்பை வைத்து சிக்கை எடுத்துவிடலாம். சிக்கெடுக்க கீழிருந்து மேல் பார்த்து எடுப்பதுதான் சிறந்த பாதுகாப்பு.

---

# வித்தியாச வீடுகள்!






உலகில் பல வடிவங்களில் வீடுகள் வந்தாலும், சில வீடுகள் மட்டுமே உலகளவில் பேசப்படுகின்றன. அவற்றில் இரண்டு வீடுகள், மிகவும் வித்யாசமானவை.

**கல் வீடு:** போர்த்துக்கல் நாட்டில், பேப் மலையில் உள்ள வீடு, “கல் வீடு” என்று அழைக்கப்படுகிறது. அடுத்தடுத்த நான்கு பெரிய பாறாங்கற்களுக்குள், இரண்டு அடுக்குகளாக, இயற்கைச் சூழலில் கட்டப்பட்டுள்ளது. வீட்டின் உள்ளே அனைத்து வசதிகளும் உள்ளன. குறிப்பாக, குளிர்காய தீ மூட்டும் இடம் முதல் நீச்சல் குளம் வரை உள்ளது.

**கிளிஞ்சல் வீடு:** மெக்சிகோவில், கிளிஞ்சல் (சிப்பிகள் - சோகிகள்) வடிவில், ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது. புகழ் பெற்ற கட்டடக் கலைஞர் ஜாவீர் சோனாசியான் என்பவர் இவ்வீட்டை வடிவமைத்துள்ளார். வெளியே கரடு முரடாகத் தோன்றினாலும், உள்ளே சென்றால் எல்லாம், “வழவழா” பளிங்குத் தரைகள் சுவர்கள்தான். வட்ட வடிவில் மாடிப்படிகள், இயற்கைத் தாவரங்கள் என, அனைத்து நவீன வசதிகளும் இந்த கிளிஞ்சல் வீட்டில் உள்ளன.

யாழ். இணையும் கரங்கள் சனசமூக நிலையத்தில் சமுர்த்தி மகா சங்கத்தினால் வாழ்வாதார உதவிக்கள் வழங்கும் கலந்துரையாடல் ஜே. 87 கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்ற போது பிரதிநிதி ஒருவர் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மக்களில் ஒருபகுதியினரையும் காணலாம். (105)

# பருத்தித்துறை துறைமுக வீதியூடாக பஸ் சேவையை ஆரம்பிக்க கோரிக்கை

நாட்டில் நிலவிய யுத்த அனர்த்த காலத்தில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்ட பருத்தித்துறை துறைமுகவீதியூடாக வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச்சபை பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 751 பாதை இலக்க பஸ்சேவைகளை நடாத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறு அப்பிரதேசமக்கள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடமும் இலங்கைப் போக்குவரத்துச்சபை வடபிராந்திய பொதுமுகாமையாளரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களது கோரிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பொதுமக்களின் வீடுகள் அவர்களிடம் கையளிக்கப்பட்ட பின்னர் வீதிகள் யாவும் மக்கள் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டன. பருத்தித்துறை துறைமுகமும் மீனவர்கள் பாவனைக்காக அவர்களிடம் கையளிக்கப்பட்டன. இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இந்நிலையில் இத்துறைமுக வீதியூடாக நடாத்தப்பட வேண்டிய வடபிராந்திய போக்குவரத்துச்சாலையின் 751 பாதை இலக்க யாழ்ப்பாணம் - பருத்தித்துறை சேவை இதுவரை நடாத்தப்படவில்லை 751 பாதை இலக்க பஸ்சேவைகள் இவ்வீதியூடாகவே நடாத்தப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது ஆனால் அச்சேவை இதுவரை நடாத்தப்படாதமையால் மக்கள் கஷ்டங்களையும், அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர். எனவே 751 பாதை இலக்க பஸ்சேவையை துறைமுக வீதியூடாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விமோசனம் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# 'காந்தீயம்' பத்திரிகை அறிமுகம்

. அகில இலங்கை காந்தி சேவா சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகத்துடன் இணைந்து நடாத்தும் மில்க்வைற் கனகராசாவின் நினைவு தின நிகழ்வும், காந்தீயம் பத்திரிகை அறிமுகமும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அண்ணாகோப்பி நிறுவன தொழிலதிபர் பொ. நடராசா கலந்து கொள்வார்.

காந்தி அஞ்சலி, நினைவுச் சுடரேற்றல், மாணவர்கள் சத்தியப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வைத் தொடர்ந்து வரவேற்புரையை கல்லூரி பிரதி அதிபர் திருமதி சு.திருச்செல்வமும் தொடக்க உரையை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகமும், நினைவுரையை காந்தீயம் ஆசிரியர், எம். சாந்தன் சத்தியகீர்த்தி, சமூகத்தொண்டர் மில்க்வைற் கனகராசா எனும் தலைப்பிலும் ஆற்றவுள்ளனர்.

சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த காந்தீயப் பார்வையும் மில்க்வைற்றின் பணிகளும் எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

கல்லூரி மாணவி செல்வி உ.சாந்திகா 'மனித விழுமியங்கள்' எனும் தலைப்பிலும் காந்தீயம் அறிமுகவுரையை கா.கார்த்திகேசுவும் நிகழ்த்தவுள்ளனர்.

# பொருட்கொள்வனவில் மீதி பணத்துக்கு இனிப்பு

சுன்னாகம் நகரப்பகுதி கடைகளில் பொதுமக்கள் கொள்வனவு செய்யும் பொருட்களுக்குரிய விலைகளுக்கு பணத்தினைச் செலுத்தும்போது மிகுதிப்பணத்திற்கு பதிலாக கடை உரிமையாளர்கள் ரொபி, பவுள்கம்,தீப்பெட்டி போன்ற பொருட்களைக் கொடுப்பதால் வதால் பொதுமக்கள் தாம் பல பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி சுன்னாகம் நகரில் போட்டோ பிரதி செய்வதற்கு செல்லும் பொதுமக்களுக்கும் மிகுதிப்பணத்திற்கு பதிலாக ரொபி வழங்கப்படுவதால் பொதுமக்களின் சிறுசிறுசேமிப்புக்கள் ரொபிகளாகவே கரைந்து போவதாக கவலை தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி பொதுமக்கள் நலனில் அக்கறை செலுத்தவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# நிரந்தர வீடுகள் வழங்குமாறு கிளிநொச்சி மக்கள் கோரிக்கை


கிளிநொச்சி புகையிரத நிலைய பாதையில் வசித்து வந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது புகையிரதப்பாதைகள் அனைத்தும் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் நிலையில் அப்பகுதியில் வசித்துவந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் தேவையென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என குற்றச்சாட்டு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப்பகுதியில் 39 குடும்பங்கள் தகரக் கொட்டகைகளிலேயே தமது வாழ்க்கையை வாழ்ந்துவருவதாகவும் இதனை கிளிநொச்சி மாவட்ட கே/23 கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சுகாதார பிரிவினர் பார்வையிட்டுச் சென்றுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். அது மட்டுமன்றி இப்பகுதியில் மீண்டும் வாழ்வதற்கு தமக்கு ஐயம் ஏற்பட்டுள்ளதுடன் சுகாதாரம் தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயம் தொடர்பில் கவனமெடுத்து உடன்நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (140)

# உளவியல் நெருக்கீடுகளும் தீர்வுகளும்



**வ**டமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் வடபகுதியின் உளநெருக்கீடுகள் தொடர்பான பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும், எனும் விடயப் பரப்பில் மக்களுக்கான விழிப்பூட்டல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாணசுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி நி. துரைரட்ணம் தெரிவித் தார்.

நவீனமயப்படுத்தப்பட்ட நாகரிக வாழ்க்கையினாலும் பல்வேறுபட்ட குடும்பச் சூழ்நிலை, போரனர்த்தம் போன்றவற்றினாலும் வடபகுதி மக்கள் தற்போது பல்வேறுபட்ட நெருக்கடிகளை சந்திக்கவேண்டிய கட்டாயத்திற்குட்படுத்தப்பட்டுள்ளதால் உளவியல் தொடர்பான நெருக்கீடுகள் வடபகுதியில் சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

வடபகுதி தமிழர்களின் பாரம்பரியம் கலை கலாசாரம் என்பது உலகத் தமிழர்களால் மட்டுமன்றி ஏனைய சமூகத்தவர்களாலும் விரும்பப்பட்டதுடன் பாராட்டப்பட்ட ஒன்றாகவும் இருந்து வந்தது.

இன்றைய நவீனத்துவ மாற்றங்கள் முக்கியமாக போருக்குப்பின்னரான எமது இளம் சமுதாயத்தினரிடையே ஏற்பட்டு வரும் மாற்றங்கள் அதிர்ச்சியூட்டும் விதமாக காணப்படுகின்றன. இள வயதினரிடையே அதிகரித்து வரும் புகை, போதைப்பழக்கங்கள், இளவயதுக் கர்ப்பங்கள், தற்கொலைகள், வன்முறைப்போக்குகள், ஆசிரியர் பெற்றோரை மதிக்காத அலட்சிய மனப்பாங்குகள் என்பன சமூகத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்த தொடங்கியுள்ளன.

இவ்வாறான விரும்பத்தகாத மாற்றங்கள் தொடர்பில் அரச, அரசசார் பற்ற சமூக அக்கறைசார் நிறுவனங்கள் உடனடியாக கவனம் செலுத்தி அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வாறான இளம் சமுதாயத்தின் மாறுபட்ட உளமாற்றங்களை சீர்படுத்த நடவடிக்கை எடுக்காவிடின் எமது சமூகத்தின் பாரம்பரிய கலாசாரம் அழிவதுடன் எமது எதிர்கால சந்ததியினர் மிக மோசமான விளைவுகளை எதிர் கொள்வதும் தவிர்க்கமுடியாததொன்றாகி விடும்.

எனவே சமூக உள மாற்றங்களை ஏற்படுத்தி நல்வழிப்படுத்த தமிழர் பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவத்தில் கூறப்படுகின்ற விசேடமான வழிமுறைகளுடாக புதிய திட்டங்களை மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இத் திட்டம் தொடர்பில் சமூக மட்டங்களில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவற்காக ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று மாகாண ஆணையாளர், சுதேச மருத்துவத் துறை அவர்களின் தலைமையில் அண்மையில் மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக உளவியல் சார் நிபுணத்துவம் பெற்றவர்கள் மூலமாக அறிவூட்டல் பயிற்சியூடாக நீண்டகால நோக்கிலான திட்டவரைபொன்றை தயாரித்தல் தொடர்பிலான கருத்தமர்வு யூன் மாத இறுதியில் நடாத்தப்பட்டது.

இத் திட்ட வரைபின் மூலம் பாடசாலை மட்ட மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், முதியோர்கள் தொடர்பிலான உளநெருக்கீட்டுப் பிரச்சினைகளை இனம் காணலும் தீர்த்தலும் மற்றும் யோகாசனப் பயிற்சி நெறிகளை முன்னெடுத்தல் தொடர்பான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டங்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கி இதனை முன்னெடுத்துச்செல்ல உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்.**

# குளங்களிலுள்ள சேறுகளை அகற்றி கால்நடைகளுக்கு உதவ முடியுமா?

## பிரதேசசபை உறுப்பினர்கள் கேள்வி

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைகளுக்குட்பட்ட குளங்களில் நீர்வற்றியதால் அங்குள்ள கால்கடைகள் குடிப்பதற்கு நீரின்றி நாளாந்தம் இறந்துவருவதாகவும் கமநல சேவைத் திணைக்களம் குளங்களில் உள்ள சேறுகளை அகற்றி கால்நடைகள் நீரைப்பருக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென கரவெட்டி பிரதேசசபை உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைகளுக்குப்பட்ட பகுதிகளில் பலநூற்றுக்கணக்கான கால்நடை வளர்ப்போர் வாழ்கின்றனர். இவர்கள் இந்த கால்நடை வளர்ப்பின் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே தமது குடும்பங்களை நடாத்தி வருகின்றனர்.

ஆனால் இன்று குளங்களிலுள்ள நீர்வற்றியதால் கால்நடைகள் நீரின்றி நாளாந்தம் இறந்து கொண்டிருக்க யாழ். மாவட்ட கமநல சேவைத்திணைக்களம் குளங்களுக்கு உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கின்றதே தவிர குளச் சேறுகளை அகற்றி கால் நடைகள் நீரைப் பருக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை இதன் காரணமாக இப்பிரதேசத்தில் நீர் பருகுவதற்குச் சென்ற பல மாடுகள் சேற்றில் புதைந்து இறந்து கிடப்பதைக்காணக்கூடியதாக உள்ளது. இதன் காரணமாக கால நடைவளர்ப்போர்கள் தங்களுடைய நாளாந்த சீவியத்திற்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருக் கிறார்கள்.

இந்நிலையில் கால் நடைகள் நீரின்றி இறப்பதைத் தடுபபதற்கு குளங்களில் உள்ள சேற்றை யாழ்ப்பாணம் கமநல சேவை நிலையத்தினூடாக அகற்றி துப்பரவு செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை எடுக்குமா? என பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும் இக்குளங்கள் கால் நடைகள் நீர் பருகுவதற்கும், நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும் முன்னொரு காலத்தில் தோண்டபபட்டவை. அப்போது கிராமச் சபைகளே இக்குளங்களை பராமரித்து வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மாற்றுவலுவுடைய பயணிகளை புறந்தள்ளும் பேருந்துகள்

கிளிநொச்சியிலிருந்து முழங்காவில் வரை சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் மாற்றுவலுவுடைய பயணிகளைப் புறந்தள்ளுவதால் அவர்கள் பல்வேறு அவலநிலையை எதிர்நோக்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அண்மையில் வைததியசாலையில் சிகிச்சை பெற்றுவிட்டு கிளிநொச்சியிலிருந்து முழங்காவில் செல்வதற்கு அரச பேருந்தில் பிரயாணம் செய்த பயணிகள் ஸ்கந்தபுரம் முருகன் ஆலய முன்வீதியில் பேருந்து பழுதடைந்து விட்டதாக அங்கிருந்த தனியார் பேருந்துகளில் ஏறிக்கொண்டநிலையில் மாற்றுவலுவுடைய நபரை அதில் ஏற்றாது விட்டுச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சில சந்தர்ப்பங்களில் மாற்றுவலுவுடையோர் புறககணிக்கப்படுவதாகவும் இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொளகின்றனர்.

# இந்து ஆரம்ப பாடசாலைக்கு கட்டடம் அமைக்க ஏற்பாடு

வடமராட்சி கிழக்கு உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலையில் 14 மில்லியன்ரூபா செலவில் 110x25, வகுப்பறைக் கட்டடமென்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை கடந்த 16ஆம் திகதி வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ். நந்தகுமார் நாட்டிவைத்தார். தொடர்ந்து கட்டட நிர்மாண வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரியிலும் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபா செலவில் வகுப்பறைகள் கொண்ட மாடிக்கட்டடமொன்று 130x30) நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை கல்லூரி அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன் தலைமையில் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் நாட்டிவைத்தார் தொடர்ந்து நிர்மாண வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (01)

# வடமராட்சி வலயத்தின் பாடசாலை மட்ட போட்டி முடிவுகள்

(கரணவாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட வினாடிவினா பேச்சு கட்டுரைப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிமுதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு

**(முன்னைய தொடர்)**

**வினாடிவினாப்போட்டி தரம் 11**

வி. மாதுமை (வடஇந்து மகளிர் கல்லூரி), எஸ். தேனுகாசினி (விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ். டிலக்ஷன் (நெல்லியடி மத்திய கல்லூரி).

**தரம் 12**

எஸ். ஹேமினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே.நிறோசினி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), எம்.மதிவதனம் (வடஇந்து மகளிர் கல்லூரி).

**கட்டுரைப்போட்டி தரம் 10**

பி.அசிகா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), கே.ஜெயப்பிரின்சிகா (சென்தோமஸ் றோ.க.த.க.பாடசாலை ரி.ஜெயகாந் (சிதம்பராக்கல்லூரி)

**தரம் 11**

எல்.தமிழரசி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை), வி.ராஜ்குமார் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், எஸ்.சயந்தன் (பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி)

**தரம் 12**

ரி.கோமகள் (வடஇந்து மகளிர் கல்லூரி), எஸ்.கௌசிகா வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) எஸ்.சுபாசினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) (18)



வேலணை அராலி சந்திக்கு அருகாமையில் உள்ள பாலம் புனரமைக்கப்பட்டு வருவதைக் காணலாம். (சி)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவர் தென்னாபிரிக்காவின் பிரதமராக இருந்தவர். பாராளுமன்றத்தில் பேசுவதற்கு அவருக்கு ஒரு புள்ளிவிவரம் தேவைப்பட்டது. மறுநாள் அதைப் பற்றி பேசியாக வேண்டும். தம் செயலாளரைக் கூப்பிட்டு, "இந்தப் புள்ளிவிவரம் எனக்குத் தேவை. எதிர்க்கட்சிக்காரர்களை இதைக் கொண்டு தான் நாளைக்குத் திணற அழக்கவேண்டும்" என்றார்.

செயலாளர் திகைத்தார். நாளைக்கா? இந்தப் புள்ளிவிவரங்களைச் சேர்ப்பதற்குக் குறைந்தது ஐந்து ஆண்டுகள் ஆகுமே" என்றார்.

"ஐந்து ஆண்டுகளா? நாளைக்கு எனக்கு வேண்டுமே, சரி, நீங்கள் போகலாம்" என்று சொல்லிவிட்டார் ஸ்மட்ஸ். அந்தப் புள்ளிவிவரத்தைப் பற்றிப் பேசமாட்டார் என்றே நினைத்தார் செயலாளர். ஆனால் மறுநாள் பாராளுமன்றத்தில் ஆச்சரியப்படத்தக்க வகையில் பேச்சு முழுவதும் புள்ளிவிவரமாகவே பேசித் தள்ளிவிட்டார் ஸ்மட்ஸ்.

பேச்சு முடிந்தது. செயலாளர் வந்தார். ஸ்மட்ஸைத் தனியாகச் சந்தித்து, "இந்தப் புள்ளிவிவரங்களை ஒரே இரவில் எப்பழச் சேகரித்தீர்கள்? ஆச்சரியமாக இருக்கிறதே" என்றார். ஸ்மட்ஸ் குறும்பாகச் சிரித்தார். பின்பு, ரகசியக் குரலில், "இந்த விவரங்களைச் சேகரிக்க அரசினருக்கே ஐந்து ஆண்டுகள் ஆகும் என்று சொன்னீர்கள். அவர்களுக்கே அப்பழயென்றால் எதிர்க் கட்சியினருக்கு இவை உண்மைதானா என்று கண்டுபிழத்து என்னை மடக்குவதற்குள் நான் நிச்சயமாக இந்தப் பதவியில் இருக்கமாட்டேன்" என்றார்.

*** *** *** ***

அகதா கிறிஸ்ழ எழுதிய துப்பறியும் நாடகமான எலிப்பொறி லண்டனில் பலவருடங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்தது. ரிக்கெற் விலை மிக அதிகம். இருந்தும் வெளிநாட்டினர்கூட வந்து பார்ப்பார்கள். பரீஸில் இருந்து ஒருவர் வந்து அதைப் பார்ப்பதற்காக வாடகைக்காரில் சென்றார். சென்றிறங்கியதும் பயணக் கூலி சம்பந்தமாக சண்டை மூண்டது. பயணி சற்றும் விட்டுத் தரவில்லை. பின்னால் பிற வாடகை ஒட்டுநர்கள் வந்து ஒலியெழுப்ப ஆரம்பித்தனர்.

வேறு வழியில்லை. ஆத்திரமடைந்த கார்க்காரர் காரை கிளப்பியபின் கூவினாராம் "கொலையைச் செய்தது அந்த மூன்றாவது வேலைக்காரன்!"

அவ்வளவுதான், நாடகம் அந்த பயணிக்கு ஒன்றுமில்லாமல் ஆகிவிட்டது.

*** *** *** ***

ஒரு கிராமத்தில் வைத்தியன் எந்த நோயாளியின் வீட்டுக்கு வைத்தியத்துக்குப் போனாலும் அந்த வீட்டு ஜன்னலில் ஒரு சிறு கல்லை வைத்துவிட்டு மருந்து கொடுப்பான்.

"என்னிடம் மருந்து சாப்பிடும் நோயாளியைக் கல்லால் அழத்தாலும் சாகமாட்டான் என்பதற்கு அடையாளமாகத்தான் அப்பழ கல்லை வைக்கிறேன்" என்று கூறுவான்.

ஒரு முறை ஒரு நோயாளி இறந்துவிட்டான். நோயாளியின் தந்தை வைத்தியனுடன் சண்டைக்குப் போனான்.

"என் மகன் சாகமாட்டான் என்பதற்காகக் கல் வைத்தாயே... எப்பழ என் மகன் சாகலாம்? " என்று கோபத்துடன் கேட்டான்.

அதற்கு வைத்தியன் சொன்னான்: "கோபப்படாதே... உன் வீட்டில் கல் வைத்தது... உன் மகன் உன் தலையில் கல்லைத் தூக்கிப்போட்டுவிட்டுப் போய்விடுவான் என்று சொல்வதற்காக."

*** *** *** ***

வேகமாகப் போகிற ரயில் வண்டிகளில் ஏறினால், விபத்து நேர்ந்து விடக் கூடும் என்று, ராமசாமிக்கு அச்சம். 'மிக மெதுவாகப் போகிற வண்ழ எது?' என்று, பல இடங்களில் விசாரித்து, அது எந்த ரயில் என்பதைக் கண்டுபிழத்து, அதில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

ரயில் மெதுவாக கிளம்பி, மெதுவாக ஊர்ந்து, சில ஊர்களைக்கடந்த பின், அப்பழயே நின்றது. 'என்ன... ஏது...' என்று, எல்லாரும் இறங்கிப் பார்க்க, தண்டவாளத்தில், ஒரு எருமை மாடு படுத்திருந்து. உடனே, எல்லாரும் ஓழ, அதை விரட்ழ அழக்க, கிளம்பிய ரயில், திரும்பவும் நிற்க, பழையபழ ஒரு எருமை மாடு! மீண்டும், அதை விரட்ழய பின், ரயில் கிளம்ப, மீண்டும் நின்று விட்டது. சற்று தூரத்தில், இப்போதும் ஒரு எருமை மாடு.

'இந்தப் பக்கம், எருமை மாடுகள் அதிகமா?' என்று, அருகில் இருந்தவர்களிடம் கேட்டார் ராமசாமி.

மற்றவர்கள் வேதனையோடு, 'அதெல்லாம் இல்லைங்க, முதல்ல படுத்திருந்த எருமை மாடு தான், ரயிலை முந்தி முந்தி வந்து, தண்டவாளத்தில் படுக்கிறது...' என்றனர்.

# நிறைவேற்று ஜனாதிபதிமுறைமை இடதுசாரிகளுடன் விரைவில் பேச்சு

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்றுவது குறித்தும் அதற்காக அரசியல் அமைப்பில் திருத்தங்களைச் செய்வது தொடர்பாகவும் இடதுசாரிக்கட்சிகளுடன் பேச்சு நடாத்துவதற்கு அரசு முயற்சிசெய்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை குறித்து இடதுசாரி கட்சிகளுடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விசேட பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டுமென இடதுசாரி கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் பேச்சு வார்த்தை நடாத்த நேரம் ஒன்றை ஒதுக்கித் தருமாறு இடதுசாரி கட்சிகள் கோரியிருந்தன.

அதன் அடிப்படையில் இந்த வாரத்தில் இடதுசாரி கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.


ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜ கட்சி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளன.

அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தின் ஊடாக மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென இடதுசாரி கட்சிகள் அரசாங்கத்திடம் யோசனைத் திட்டமொன்றை முன்வைத்துள்ளன.

இந்த யோசனைத் திட்டம் குறித்து ஜனாதிபதியுடன் வரும் வாரத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

# முகப்புத்தகத்தில் மீண்டும் சம்பிக்க

(கொழும்பு)



தொழில்நுட்ப மற்றும் ஆய்வு அமைச்சர் சம்பிக்க ரணவக்க புதிய பேஸ்புக் கணக்கு ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

சம்பிக்க ரணவக்கவின் பழைய பேஸ்புக் கணக்கு செயலிழக்கச் செய்யப்பட்டதன் பின்னர், புதிய கணக்கு ஒன்றை ஆரம்பித்துள்ளார். புதிய கணக்கில் 1500 லைக்குகளை மட்டுமே செய்ய முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பழைய கணக்கில் 21000 நண்பர்கள் இணைக்கப்பட்டிருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். சில சக்திகள் திட்டமிட்ட வகையில் தமது கணக்கை முடக்கும் சூழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

# தேவாலயத்தில் புதையல் தோண்டிய ஒருவருக்கு சிறை

கொட்டாஞ்சேனை ஆட்டுப்பட்டி தெருவிலுள்ள ஒல்லாந்தர் கால தேவாலயத்தின் பொறுப்பாளரை, ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் திலின கமகே, நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

தேவாலயத்தில் இருக்கின்ற இடிதாங்கியின் அடிப்பகுதி புதைக்கப்பட்டிருக்கின்ற இடத்தை தோண்டி புதையல் தோண்டுவதற்கு உதவியளித்ததாக அவருக்கு எதிராக பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு, நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். விலை மதிக்க முடியாத பொருளொன்றையே குறித்த நபர் தேடியுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

# ஆயுத முனையில் கொள்ளை தெற்கில் மிக அதிகம்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆயுதமுனையில் கொள்ளையிடப்பட்ட 14 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சம்பவங்களையொத்த இன்னுமொரு சம்பவம் நேற்று முன்தினம் நிட்டம்புவையில் பதிவானதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவிக்கின்றார்.




நிட்டம்புவையில் நகைக் கடையொன்றினுள் ஆயுதங்களுடன் நுழைந்த கொள்ளையர்களை பிடிப்பதற்காக அதன் உரிமையாளர் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் சிறந்த முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே குற்றச் செயல்களைத் தவிர்ப்பதற்காக வர்த்தக நிலையங்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களின்போது, கொள்ளையர்கள் முகங்களை முற்றாக மறைக்கும் வகையில் தலைக் கவசம் அணிந்திருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், குறிப்பிட்ட 14 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பிலும் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய தீர்வுகள் எட்டப்பட்டிருந்ததாகவும் அஜித் ரோஹண தெரிவித்தார்.





'அந்த எண்ணமும் இல்லை அந்த நோக்கமும் இல்லை' இந்திய உபகண்ட பிரதம மந்திரியாக நரேந்திர மோடி அலங்கரிக்கும் புதிய அரசு முக்கியமான ஒரு விடயத்தில் இப்புடித்தான் இருந்து வருவதாக பரமர்பார்வையில் படுகிறது.

பதவியேற்ற வைபவத்திற்குச் சென்ற ஜனாதிபதி மரியாதையின் பொருட்டு முதல் நாள் கைது செய்யப்பட்ட 79 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்திருந்தார். தொடர்ந்தும் பல தடவைகள் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் இண்டுவரையும் விடுதலை செய்து வருவதும் குறிப்பிடலாம்.

1974 ஆம் ஆண்டு இரு நாடுகளிலும் பிரதமர் பதவியில் இருந்தவர்கள் ஸ்ரீமாவோபண்டார நாயக்கவும், ஸ்ரீ மதி இந்திரா காந்தியுமே! அவவேளை இந்திராகாந்தி கச்சதீவை இலங்கைக்கே உடமையென ஸ்ரீமாவுடன் சேர்ந்து உடன் படிக்கை கைச்சாத்திட்டு கொண்டார்.

முப்பது வருடகாலப் போராட்டத்தால் கவனிப்பாரற்று விடப்பட்ட கச்சதீவும் அது சார்ந்த இலங்கைக் கடல் பிரதேசங்களான நெடுந்தீவு, மன்னார் குடாப்பிரதேசங்களில் தனிச்சையாக மீன் பிடிச்ச இந்திய மீனவர்களுக்கு இலங்கையில் ஏற்பட்ட சுமுகநிலை எமனாகிவிட்டது.

எண்டாலும் ஜெயலலிதா அம்மையார் கச்சதீவை தமிழ் நாட்டுக்கு உரிமையாக்க பெரிதும் முயன்று வருகிறார். இந்திய நீதிமன்றம் இலங்கைக்கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் நுழைவது குற்றம் என்றும் அறிவித்துள்ளது.

சோழியன் குடும்பி சும்மா ஆடாதென்பதற்கு ஏற்ப யார் எதைச் சொன்னபோதும் செவிடன் காதில் ஊதிய சங்காக அலட்சியப் படுத்தி தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையுள் நுழைவதும் இலங்கைக் கடற்படை கைது செய்வதும் சீரிச்சுப்போச்சு.

சொறணை கெட்ட எருமை மாடுகளைப் போல சுத்திச்சுத்தி இலங்கைக் கடல் எல்லையுள் நுழைவதற்கும் ஏதாவது பின்னணி இருக்கவேண்டும். தமிழக அரசு மீனவர்களைத் தூண்டிவிட்டு விசயத்தைப் பெரிசாக்கிப் புதிய பிரதமரைக் கொண்டு கச்சதீவைக் கையகப்படுத்தும் நோக்கம் ஜெயலலிதாவுக்கு இருக்கலாம்.

இல்லையெண்டால் சட்டப்படி குற்றம் செய்யும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதும் டெல்லிக்குக் கூக்குரல் போடுவானேன்?

1987 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களுக்கு நூறு வள்ளங்களில் உணவு, மருந்துப் பொருட்களைக் கொண்டு வர வெளிக்கிட்ட சுப்பிரமணியசாமி மீனவர் பிரச்சினையைத் தீர்க்க கொழும்புக்குப் போய் ஜனாதிபதியைச் சந்திக்க ஜெயலலிதாவுக்கும் சிபார்சு செய்தவர்.

இடையே தொழிலில் ஈடுபடும் நாள் ஒன்றுக்கு பத்தாயிரம் இலங்கைக்கு வழங்க யோசனைகூறிய இந்திய அரசு தமிழக மீனவர் அதனை ஏற்காததால் சுவாமி தலைமேல கொழும்புக்குக் குழுவொன்றை அனுப்பியதும் கண்துடைப்பாத்தான் இருப்பதால் இந்தியாவுக்கு அந்த எண்ணமும் இல்லை அந்த நோக்கமும் இல்லைத்தான் போல கிடக்கு... இல்லையே பின்ன...

# மடு மாதா உற்சவகாலத்தில் அத்தியாவசிய சேவைகள் வழங்க ஏற்பாடு

(மன்னார்)

மடு அன்னையின் வருடாந்த ஆவணித்திருவிழா தொடர்பான முதலாவது ஆலோசனை கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை மாலை, மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை மடுத்திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ் பிள்ளை மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.குனவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் ஆவணி 15 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் மடு அன்னையின் வருடாந்த திருவிழாவிற்குத் தேவையான முன்னேற்பாடுகள் குறித்து குறித்த கலந்துரையாடலில் ஆலோசிக்கப்பட்டிருப்பதாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை தெரிவித்திருக்கின்றார். குறிப்பாக மேற்படி கலந்துரையாடலில் சம்மந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாகவும் அதில் போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், சுகாதாரம், பாதுகாப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

# பரீட்சை வினாப்பத்திரத்தில் தெளிவற்ற புகைப்படம்

## ஆசிரியர் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு கல்வி வலய அலுவலகத்தின் கீழ் நடாத்தப்படும், இரண்டாம் தவணை பரீட்சைக்காக 7 ஆம் தர மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஆங்கில வினாத்தாளின் சில புகைபடங்கள் தெளிவற்று இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை இலங்கை ஆசிரியர் சங்கம் முன்வைத்துள்ளது.

தெளிவற்ற புகைப்படத்திற்கான வினாவிற்கு எவ்வாறு மாணவர்கள் பதில் வழங்குவது என அந்த சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.


இது தொடர்பாக மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.ஏ.பி. தயா சேனரத்திடம் வினவியபோது. அதற்கு பதிலளித்த அவர் இது தொடர்பில் மேல் மாகாண முதலமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாக குறிப்பிட்டார்.

# தங்கம் கடத்திய இரு பெண்கள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக பெங்களூருக்கு கடத்திச் செல்ல முயன்ற தங்கப்பாளம் மற்றும் ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டன தங்கத்தை நேற்றுமுன்தினம் இரவு கடத்த முற்பட்ட வேளையே இரு பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களிடம் இருந்து 85 இலட்சத்து 90ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. இருவர் மீதும் தங்கத்தை மறைத்து வைத்து கடத்த முயன்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

14  கையில் உள்ள பொருள் பற்றி என்ன எழுதுவீர்கள்

..................................................................

15. 2012 இல் ஒலிம்பிக் போட்டி நடைபெறவிருக்கும் நாடு
   1. சீனா 2. இங்கிலாந்து
   3. லண்டன் 4. ஏதென்ஸ்


16. ஐக்கியநாடுகள் சபையினால் உலக புத்தக தினமாக அறிவிக்கப்பட்ட தினம்
   1. மார்ச் 8 2. பெப்ரவரி 14 3. ஒக்டோபர் 6 4. ஏப்ரல் 23

17. தரப்பட்டுள்ள கோள்களுள் வாயுக்களால் ஆன கோள்
   1. பூமி 2. வியாழன் 3. சந்திரன் 4. செவ்வாய்

18. மிகவும் வேகமாக ஓடக்கூடிய விலங்கு.
   1. மான் 2. முயல் 3. சிறுத்தைப்புலி 4. குதிரை

19. இலங்கையில் புதிதாக அமைக்கப்படுகின்ற துறைமுகம் அமைந்துள்ள இடம்
   1. காங்கேசன்துறை 2. பருத்தித்துறை
   3. திருகோணமலை 4. அம்பாந்தோட்டை

20. தரப்பட்டுள்ள விளையாட்டுப்பொருளின் பெயர்.



   1. தள்ளுவண்டி
   2. சுழல்வண்டி
   3. சில்லுவண்டி

21. வித்துக்களின் பயன் அல்லாதது.
   1.புதியதாவரம் உருவாகும் 2.தாவரங்களுக்குஉணவாகும்
   3. விலங்குணவாகும்.

22. தரப்பட்டுள்ள பிராணிகளில் பற்கள் இல்லாத விலங்கு.
   1. ஆமை 2. மாடு
   3. நாய் 4. ஆடு

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



கொக்கு ஒன்று கரையிலே
ஒற்றைக் காலில் நிற்பதைக்
கொப்பிலிருந்த குருவியும்
குறுகுறு என்று பார்த்தது

2. குளத்து நீரின் பரப்பிலே
நீந்தி வந்த மீனினை
கொக்கு கௌவிப் பிடித்திட
குருவி பறந்து சென்றது.

◆ வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. குளம் என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுங்கள்.
   ..................................................
2. மீனை என்ற சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுங்கள்.
   ..............................
3. பாடலில் இடம்பெற்றுள்ள இரட்டைக்கிளவியை எழுதுங்கள்.
   ..................................................
4. பறந்து சென்றது என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?
   ..................................................
5. இங்கு இடம்பெற்றுள்ள வினையடைமொழிச் சொல் ஒன்று எழுதுங்கள்.
   ..................................................
6. கௌவிப் பிடித்திட என்பதனாற் கருதப்படுவது யாது?
   ..................................................
7. அஃறிணை ஒருமை இறந்தகால வினைச்சொல் ஒன்றைப் பாடலில் இருந்து தருக.
   ..................................................
8. இங்கு இடம்பெற்றுள்ள பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொல் ஒன்று தரு
   ..................................................
9. குருவி எங்கு இருந்தது?
   ..................................................
10. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பறவைகள் இரண்டின் பெயர்களை எழுதுங்கள்.

2. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்கி எழுதுங்கள்.

1. வைரஸ் / தொற்றும் / நோயாகும் / கிருமியினால் / டெங்குக் காய்ச்சல் / ஒரு

.......................................................................................................

2. இரு / அந்த / நிழல் / பக்கங்களிலும் / வீதியின் / மரங்கள் / நின்றன

.......................................................................................................

3. அடைப்பிற்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் எழுதுங்கள்.

1. மாலா ஆக்கம் செய்வதற்காக -------------------------------- பயன்படுத்தித் துணியை வெட்டினாள். (கத்திரிக்கோழைப், கத்தரிக்கோலைப், கத்தரிக்கோளைப்)

2. இந்துக்கள் தீபாவளித் தினத்தில் -------------------------------- வைத்து நீராடுவார்கள். (எண்ணை, எண்ணெய், என்ணெய்)

4. தரப்படும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்குக் குறையாத ஒரு வாக்கியங்கள் எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சிறுவர்கள், | வீடு, | பூக்கள், | வீசும், | மலர்ந்து, |
| படித்தான், | மலர்ந்தன, | படித்தனர், | ஏற்றி, | பட்டம், |
| மணம், | கடற்கரையில், | விளையாடினார்கள், | அதிகாலையில், | |

.......................................................................................................

5. தரப்பட்ட வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

1. பெரியவரே உங்களுக்கு என்ன வேண்டும் எனக் குமரன் கேட்டான்

6. தரப்படும் மரபுத்தொடர்களுக்கான உட்கருத்தைத் தமிழில் எழுதுக

1. விட்டுக் கொடுத்தல் - ........................................

2. பூசி மெழுகுதல் - ........................................

7. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக

1. பாடம கியலா தென்ன – ........................................

2. மட்ட பத் எப்பா - ........................................



8. தமிழில் உள்ளவற்றின் சிங்களக் கருத்தினை தமிழில் எழுதுக.

1. எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தாருங்கள் ........................................

2. ஏன் நேற்று வரவில்லை ........................................

9. பின்வருவனவற்றின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

1. I like cake – ........................................

2. Please Come here – ........................................


10. தமிழில் உள்ளவற்றை ஆங்கிலத்தில் எழுதுக

1. புத்தகங்களை எடுங்கள் – ........................................

2. நூலகத்திற்குச் செல்லுங்கள் -........................................

◆ சரியான விடையை எழுதுக.

11. தரப்பட்டுள்ள படத்திற்கு பொருத்தமான ஒரு வசனம் எழுங்கள்



........................................................................

........................................................................

12. தரப்பட்டுள்ள பிராணியால் சூழலுக்குக் கிடைக்கும் நன்மை ஒன்றை எழுதுங்கள்.



........................................................................

........................................................................

13.  இந்த விளையாட்டின் பெயரை தமிழில் எழுதுங்கள்.

........................................................................

# அரசியல் தீர்வை பெற்றுத்தர கடுமையாக போராடவேண்டியுள்ளது

## ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



வடபகுதி மக்களுக்கான அபிவிருத்தி என்பது எமக்கு ஒரு சவாலான விடயம் அல்ல. ஆனால் அரசியல் தீர்வை பெற்றுத்தர நாம் மிகவும் கடுமையாக போராட வேண்டியவர் களாக இருக்கின்றோம்.

மக்கள் எமக்கு அபிவிருததிக்கான சக்தியை மட்டும் தந்துவிட்டு அரசியலுக்கான தீர்வை பெறும் சக்தியை தேசியம் கூறிக்கொண்டு இருப்பவர்களிடம் கொடுத்துவிட்டு துடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) கூறியுள்ளார்.

வாழ்வாதாரம் குறைந்த மக்களது அபிவிருத்திக்கான ஆலோசனைகளையும் திட்டங்களையும் பெற்றுக்கொடுப்பதற்கான மக்கள் சந்திப்பு வட்டுக்கோட்டை (ஜே/165) பகுதி மக்களால் ஒழுங்கு செய்யபபட்டு வட்டு. கார்த்திகேய வித்தியாலய மணடபத்தில் தவராசா தலைமையில் நடைபெறறது.

இந்த சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரை யாற்றிய ஒருங்கிணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களது வாக்குகளைப் பெற்று மக்கள் பிரதிநிதிகளாக வந்தவர்கள் மக்களை திரும்பி பாராது இருப்பதால் தான் தொடர்ந்தும் தமிழ் மக்கள் அபிவிருத்தியில் கீழ் மட்டத்தை நோக்கி செல்ல வேண்டி உள்ளது.

தற்போது யாழ் குடாநாட்டு மக்கள் குடிதண்ணீர் மாசுறுதல் மூலம் மற்றுமொரு அழிவுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு தீர்வுகாண ஆசிய அபிவிருத்தி வங்கி பலகோடி நிதியைக் கொடுத்திருந்தும் சுயநலம் கொண்ட வன்னிமாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் போலித்தேசியவாதிகளால் திட்டமிட்டவகையில் பிரதேச வாதம் தூண்டப்பட்டு அது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை பொறுத்தவரை குடாநாட்டு மக்களை மட்டுமல்லாது முள்ளிவாய்க்காலுடன் முடிவுற்ற யுத்தத்திலிருந்து மீண்டு தடுப்பு முகாம்களிலும் புனர்வாழ்வு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்ட மக்களையும் காப்பாற்றி அவர்களது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி சமூகத்தில் ஓரளவேனும் தலைநிமிர்ந்து வாழக்கூடிய வகையில் வாழ் வாதாரத்தை அமைத்துக் கொடுத்துள்ளோம் என்றார்.

இச் சந்திப்பில் வலி.மேற்கு எதர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளருமான ஜீவன், சமுர்த்தி உத்தியோகத்தர் குமணன், கிராம சேவகர் மேனன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜயசிறி ஆகியோரும் கலந்துகொண்டனர்.



யாழ். புதிய சோனகத்தெருவில் (பொம்மைவெளி) யாழ். சமுர்த்தி மகா சங்கமும், பொருளாதார அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையை நடாத்தியபோது மாநகரசபை உறுப்பினர் சரபுல் அனாம், சமுர்த்தி அதிகாரி உறுப்பினர் எச்.ஜெகதீசன், திருமதி கோமதி ஆகியோர் கலந்துகொண்டனர். (105)

# பல்கலை மாணவன் ஞாபகார்த்தமாக குடும்பங்களுக்கு நிதியுதவி

(வடமராட்சி)

லண்டன் பல்கலைக்கழக பொறியியல் மாணவனான புலோலியைச் சேர்ந்த செல்வன் சுப்பிரமணியம் பார்த்தீபன் ஞாபகார்த்தமாக வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் 15 குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 93 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதி உதவிகள் வழங்கும் நிகழ்வு புலோலி சிவகுலசிங்கம் அறிவாலயத்தில் இளைப்பாறிய தபால் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அத்தோடு ஜே/411 கிராம அலுவலர் பிரிவில் உள்ள அரச உதவிப் பணம் பெறும் 30 குடும்பத்தவர்களுக்கு 15,000 ரூபாவும், 6 குடும்பத்தவர்களுக்கு வங்கிக் கணக்குத் திறக்கப்பட்டு 1000 ரூபா வைப்பிலிடப்பட்டு வங்கிப் புத்தகமும் கையளிக்கப்பட்டதோடு வன்னியிலிருந்து மீள்குடியேறிய இரு குடும்பங்களுக்கு 50,000 ரூபா நிதியுதவிகளும் வழங்கப்பட்டன.

கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென் புலோலி முன்பள்ளி மின்னிணைப்புக்கு 18,000 ரூபாவும் வழங்கப்பட்டதோடு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.தர்மசீலன்; பருத்தித்துறை கால்நடை அலுவலகத்தின் அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சியாமளா, பூரணைச்சந்திரன், தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர், கிராம சேவை அலுவலர் எஸ்.உமாசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர். (01)

# மருந்து கலவை பயிற்சிக்கு விண்ணப்பங்கோரல்

சுகாதார அமைச்சின் கீழ் மருநதுக்கலவை உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு 2014.07.04 ஆம் திகதி பிரசுரமான வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு ஏற்ப விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் 8 ஆம் திகதியாகும்.

விண்ணப்பதாரி முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாத 30 வயதுக்கு மேற்படாதவராகவும், கல்வித் தகைமையாக க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ், சிங்களம், ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம், உள்ளடங்கலாக இன்னுமொரு பாடத்திலும் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்துமிருக்க வேண்டும். அத்துடன் க.பொ.த(உ/த) பரீட்சையில் இரசாயனவியல் உள்ளடங்கலாக விஞ்ஞான பிரிவில் மூன்று பாடங்களும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுகாதாரமற்ற நிலையில் மலசலகூடக்குழி



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பளை நகர் சந்தை வளாகத்தில் உள்ள மலசலகூட குழி பாதுகாப்பான மூடிகள் இன்றி சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதாகவும் இதனால் சந்தை வர்த்தகர்களும் நுகர்வோரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இம்மலசலகூட குழி இவ்வாறு அமைந்துள்ளதால் இலையான்கள் அதிகரித்துள்ளதுடன் தொற்றுநோய் பரவும் அபாயமும் காணப்படுவதாகவும் இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை இவ் மலசலகூட குழியிலிருந்து குறிப்பிட்ட தூரத்தில் இறைச்சிக்கடையும் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் வரத்து அதிகமாகவுள்ள இச்சந்தைப் பகுதியிலுள்ள மேற்படி மலசலகூட குழியை சீரமைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என சந்தை வர்த்தகர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (37)

# விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி யாழ். இந்து மாணவன் சாதனை



(யாழ்ப்பாணம்)

அகில இலஙகை ரீதியாக அண்மையில் நடைபெற்ற National Mathematics and Science Olympiad (NMSO) பரீட்சையில் பங்கு பற்றிய யாழ் இந்து மாணவன் நடேசமூர்த்தி சிவமைந்தன் விஞ்ஞான பாட பரீட்சையில் சித்தியடைந்து வெள்ளிப் பதக்கத்தினை பெற்றதுடன் சர்வதேச மட்டத்துக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அடுத்து Indonesia bali island நடைபெறவுள்ள International Mathematics and Science Olympiad (IMSO)போட்டியில் பங்குபற்றவுள்ளார்.

இவருடன் இலங்கையில் இருந்து 14 மாணவர்கள் சர்வதேச ரீதியாக நடைபெறவுள்ள ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றவிருக்கிறார்கள்.

முன்னதாகவே மாணவன் நடே சமூர்த்தி சிவமைந்தன் சென்ற வருடம் கணித பாட ஒலிம்பியாட் பரீட்சையில் சித்தியடைந்து பிலிப்பைன்ஸில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் யாழ் இந்துவில் இருந்து இதே போட்டியில் பங்குபற்றிய மாணவன் தேவானந் அபிராம் தேசிய மட்டத்தில் 15 ஆம் இடத்தினை பெற்று வெண்கலப் பதக்கத்தினை பெற்றுக்கொண்டுள்ளார். (48)


# விரைவில் வங்கிக்கிளை

(கொடிகாமம்)

கொடிகாமம் பகுதியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன இயங்குகின்றபோதிலும் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை இதுவரை இல்லாது இருந்தது.

தற்போது மிகவிரைவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக உள்ள கட்டடத்தொகுதியில் இவ்வங்கிக்கிளை இயங்கவுள்ளது.

வடமராட்சி தென்கிழக்கைச் சேர்ந்த 30 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த வங்கித் தேவைகளுக்கு வாடிக்கையாளர் இதுவரை காலமும் சாவகச்சேரி நகருக்கே சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (14)



யாழ். முனியப்பர் ஆலய தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது. இதன்போது சுவாமி தேரில் ஆரோகணிப்பதைக் காணலாம். (85)

# காஸாவில் போர் நிறுத்தம் இஸ்ரேல், ஹமாஸ் இணக்கம்



காஸாவில் தற்காலிக போர் நிறுத்தமொன்றிற்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இணக்கம் தெரிவித்துள்ளன.

இரு தரப்பினரும் 12 மணித்தியாலயங்கள் போர் நிறுத்தத்தை கடைபிடிக்கவுள்ளதாக தெரவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை காஸாவில் ஏழு நாட்கள் போர் நிறுத்தம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை ஐ.நா செயலாளர் உட்பட பல இராஜத்தந்திரிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

காஸாவில் போர்நிறுத்தமொன்றை மேற்கொள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெர்ரி விடுத்த அழைப்பை இஸ்ரேல் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் காஸாவில் நிரந்தர போர் நிறுத்தமொன்றை மேற்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளதாக ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளை முன்னிட்டு போர்நிறுத்தத்தை கடைபிடிக்குமாறு ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பான்கீ மூன் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது வரை இஸ்ரேலின் ஷெல் மற்றும் வான் தாக்குதல்களில் 815இக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெற்கு சூடானில் கடும் பஞ்சம் 39இலட்சம் மக்கள் பரிதவிப்பு



(ஜூபா)


தெற்கு சூடானில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு சூடானில் இருந்து பிரிந்து தனிநாடான தெற்கு சூடானில் சுமார் 80 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 39 இலட்சம் மக்கள் பசியால் வாடி வருவதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஊட்டச்சத்து இல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நாட்டின் எதிர்காலமே கேள்விக் குறியாகியுள்ளதாக கூறியுள்ளனர். இதனால், சர்வதேச நாடுகள் தெற்கு சூடானுக்கு அறிவித்த நிதி ஒதுக்கீட்டை துரிதமாக வழங்க வேண்டும் எனவும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

சூடானில் இருந்து தென்சூடான் பிரிந்து 3 வருடமே ஆகிறது. ஆகவே எண்ணெய்வளம் மிக்க நாடான தெற்கு சூடான், அதன் வளர்ச்சியை மேம்படுத்த முயலாமல் இருக்கிறது. மேலும், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் துணை அதிபர் ரேக் மாச்சர் பதவி நீக்கம் செய்யபபட்டதை அடுத்து நாடு முழுவதும் வன்முறைகள் நடைபெற்று வருகின்றன. இதனாலும் பொருளாதாரம் மிகவும் கவலை அளிக்கும் வகையில் உள்ளதாக கூறப்படுகிறது.

# இடைத்தேர்தலில் காங்கிரஸ் 3 தொகுதிகளிலும் வெற்றி



(டேராடூன்)

உத்தரகாண்டில் நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் 3 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. முதல்வர் ஹரஷ் ராவத், தார்சுலா தொகுதியில் 19 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இவர் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது எம்.பி.யாக இருந்தார். இவருக்காக ஹரீஷ் தாமி, தனது தார்சுலா எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்தார்.

இதனால் இந்த இடத்துக்கும், தொய்வாலா, சோமேஸ்வர் தொகுதி பாஜ எம்.எல்.ஏ.க்களாக இருந்த ரமேஷ் போக்ரியால் நிஷாங்கும், அஜய் டம்டாவும் மக்களவை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதால் காலியான இந்த தொகுதிகளுக்கும் இடைத் தேர்தல் நடத்தப்பட்டது. இதில், 3 தொகுதிகளை யும் காங்கிரஸ் பிடித்துள்ளது. இதுபற்றி காங்கிரஸ் "மோடி அரசின் கட்டுக்கதை 60 நாட்களில் அம்பலமாகி விட்டது" என்று கூறியுள்ளது.

# தவறுதலாகவே சுட்டோம் கிளர்ச்சியாளர்கள் ஒப்புதல்



உக்ரைனின் விமானம் என நினைத்து மலேசிய விமானத்தை தவறுதலாக சுட்டுவிட்டோம் என்று கிழக்கு உக்ரைனில் போராடும் ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

கிழக்கு உக்ரைன் கிளர்ச்சி குழுவை சேர்ந்த பெயரை வெளியிட விரும்பாத ஒருவர் இததாலியில் இருந்து வெளிவரும் பத்திரிக்கை ஒன்றிற்கு அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உக்ரைனின் விமானத்தை சுட்டு வீழ்த்திவிட்டதாக எங்களது உயரதிகாரிகள் சிலர் தெரிவித்தனர். அதன் பின்னர் விமானம் விழுந்த பகுதிகளை நோக்கி சென்றோம். அங்கு 5 வயதுக்கும் குறைவான பெண் குழந்தை ஒன்று முகத்தை பூமியில் புதைததபடி இறந்து கிடந்தது. கொடூரமான அந்த காட்சியை பார்த்தோம். அப்போதுதான் நாங்கள் சுட்டு வீழ்த்தியது பயணிகள் விமானத்தை என்பது தெரியவந்தது. பின்னர்தான் திரும்பிய இடமெல்லாம் உடல்கள் சிதறிக் கிடப்பதை கண்டு அதிர்ந்தோம்.

உக்ரைன் விமானத்துக்கு குறிவைத்து தவறுதலாகவே மலேசிய பயணிகள் விமானத்தை சுட்டுவிட்டோம்.இவ்வாறு ரஷ்யா ஆதரவு கிளர்ச்சி குழுவைச் சேர்ந்தவர் தெரிவித்தார்.

இதேவேளை விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட போது உக்ரைனே வீழ்த்தியது என்று ரஷ்யா குற்றம்சாட்டியது. இந்த நிலையில் ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர்களே இதனை ஒப்புக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சி தலைவர் பதவி காங்கிரஸுக்கு தகுதியில்லை



(புதுடில்லி)


லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் பதவி பெற, காங்கிரஸுக்கு தகுதியில்லை என, அட்டர்னி ஜெனரல் முகுல் ரோதகி தெரிவித்துள்ளார்.

தங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க வேணடும் என, காங்கிரஸ் கோரி வந்தது. அதனால், இது தொடர்பாக, அட்டர்னி ஜெனரல் முகுல் ரோதகியின் கருத்தை, சபாநாயகர் சுமித்ரா மகாஜன் கேட்டிருந்தார்.

இது தொடர்பாக, சபாநாயகருக்கு, முகுல் ரோதகி அனுப்பி உள்ள பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, லோக்சபாவில், காங்கிரஸுக்கு, 55 எம்.பி.,க்கள் இல்லாததால் அந்தக் கட்சிக்கு, எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறத் தகுதியில்லை. நாட்டின் முதல் லோக்சபாவில் சபாநாயகராக, மாவ்லங்கர் பதவி வகித்தார். அந்த லோக்சபா முதல் முந்தைய லோக்சபா வரை 55 எம்.பி.,க்கள் இல்லாத கட்சிக்கு, எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படவில்லை. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்து தர வாய்ப்பு இல்லை. அதற்கான முன்னுதாரணங்கள் எதுவும் இல்லை.இவ்வாறு, முகுல் ரோதகி கூறியுள்ளார்.

இது குறித்து, காங்கிரஸ் பொதுச்செயலர் 'கீல் அகமது கூறுகையில், இந்த விடயத்தில், சபாநாயகர் அறிவிக்கும் இறுதி முடிவுக்குப் பின் காங்கிரஸ் தன் கருத்தை தெரிவிக்கும், என்றார்.

# மோடியுடன் நட்புறவுக்கு அமெரிக்கா பச்சைக்கொடி



(வொஷிங்டன்)

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்தியாவுடன் அமெரிக்கா இன்னும் நெருக்கமாக நட்புறவு கொள்ளலாம் இப்போதைய நட்புறவை மேம்படுத்திக் கொள்ளலாம் என, அமெரிக்க எம்.பி.,க்கள், அந்நாட்டு அரசுக்கு, "பச்சைக் கொடி" காட்டியுள்ளனர்.

மோடி பிரதமரானதும், அவரை அமெரிக்கா வருமாறு, அதிபர் ஒபாமா முதற்கொண்டு அனைத்து அமெரிக்க தலைவர்களும் அழைத்து வருகின்றனர். செப்ரெம்பரில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்க வரும் போது அமெரிக்க நாடாளுமன்றின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்ற, மோடியை அழைக்க வேண்டும் என அமெரிக்க எம்.பி.க்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதற்காக அவர்கள் கையெழுத்து வேட்டையும் நடத்தி வருகின்றனர்.

"மோடியின் அமெரிக்க வருகை மற்றும் நாடாளுமன்றின் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரையாற்றுவதால், 'இந்தியாவுடனான நட்புறவில் மேலும் வளர்ச்சி இருக்கும். எனவே, மோடியுடனான நட்புறவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்" என, அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# செல்போன் வெளிச்சத்தில் பிறந்தது ஆண் குழந்தை

மும்பையில் ஓடும் ரயில் ஒன்றில் கைத்தொலைபேசி வெளிச்சத்தில் கர்ப்பிணி ஒருவருக்கு பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது.

மும்பையை சேர்ந்த பூஜா (வயது-23), நிறைமாத கர்ப்பிணியாக தன் குடும்பத்தினருடன் நாக்பூர் மாவட்டம் விதர்பா செல்லும் ரயிலில் பயணம் செய்துள்ளார்.

இந்நிலையில், இரவு 11 மணி அளவில் திடீரென பூஜாவிற்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது.இதையடுத்து, உடனே ரயிலில் இருந்த டிக்கெட் பரிசோதகருக்கு தகவல் கொடுத்தையடுத்து, அவர் அதே ரயிலில் பயணம் செய்த மருத்துவர் அனில் மோரேவிடம் சிகிச்சை அளிக்க கோரியுள்ளார்.

பூஜா இருந்த ரயில் பெட்டியில் மின் விளக்கு எரியாததை கண்டு அதிர்ச்சி அடைந்த மருத்துவர் அனில் தனது கைத்தொலைபேசியை எடுத்து அதன் வெளிச்சத்திலேயே பிரசவம் பார்த்ததில் பூஜாவிற்கு அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது.

# நியாயம் மற்றும் தகைமை அடிப்படையில் மின்னியல் பகுதியாளருக்கு பதவியுயர்வு



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். மாநகர சபையின் மின்னியல் பகுதியினர் சந்தித்து தமது பதவி உயர்வு தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், நியாயம் மற்றும் தகைமை அடிப்படையில் கவனம் செலுத்தப்பட்டு உரிய தீர்வு காணப்படும்.

அத்துடன் சேவைக்காலமும் கருத்தில் கொள்ளப்பட்டு ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே சந்தை மேற்பார்வையாளர்களும் தமது உள்ளகப் பதவி உயர்வு தொடர்பில் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது மாநகர முதல்வர் திருமதி பற்குணராசா, மாகாண பொதுச் சேவைகள் ஆணையாளர் தெய்வேந்திரம் ஆகியோர் உடனிருந்தனர்.

# உவர்நீர் தடுப்பணை புனரமைக்க கோரிக்கை

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்திற்கு உட்பட்ட வரணி வடக்கு தொடக்கம் நாவற்காடு வரையான பகுதியிலுள்ள வயல் வெளிகளில் உவர்நீர் தடுப்பணையை அமைத்துத்தர வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சி, நாவற்காடு, மிருசுவில் வயல்வெளிப் பகுதியில் உள்ள உவர்நீர் தடுப்பணை கடந்தகாலங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டோரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

உவர்நீர் தடுப்பணை இல்லாத காரணத்தினால் கடல் நீர் வயல் வெளிகளில் கலப்பதனால் வயல்நிலமானது உவர்நீர்த் தன்மையடைந்து காணப்படுவதோடு விளைச்சலும் குறைவாகவே காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பகுதி விவசாய அமைப்புக்கள், பொதுமக்கள், விவசாயிகளின் எதிர்காலத்தின் தேவை கருதி சேதமாக்கப்பட்ட உவர்நீர் தடுப்பணைகளை மீளவும் புனரமைத்து தரவேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## புலிகள் மீது...

சேர் டெஸ்மன் டி சில்வா உரையாற்றியதாகவும், அதில், போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும், அவர்கள் 3 இலட்சம் பொதுமக்களை தப்பிச் செல்ல விடாமல் பயணமாக பிடித்து வைத்திருந்ததாகவும், இதுவே உலகின் மிகப்பெரிய பயண நாடகம் என்றும், இதுவே மிகப் பெரிய போர்க்குற்றம் என்றும் கூறியதாகவும் சண்டே ரைம்ஸ் ஞாயிறன்று வெளியான கட்டுரையில் தெரிவித்திருந்தது.

இந்தத் தகவல்களை சேர் டெஸ்மன் டி சில்வா நிராகரித்துள்ளார்.

தீவிரவாதத்தை தோற்கடித்த இலங்கையின் அனுபவங்கள் என்ற பாதுகாப்பு அமைச்சின் கருத்தரங்கில், தாம் பங்கேற்றதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறு என்று அவர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கருத்தரங்கில் பங்கேற்றதாக, அதில் உரையாற்றியதாக கூறப்படும் அனைத்துமே தவறான தகவல்கள்.

அந்தக் கருத்தரங்கிற்குத் தாம் அழைக்கப்படவில்லை என்றும் அதில் தாம் உரையாற்றவில்லை என்றும் டெஸ்மன்ட் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 2011 ஆம் ஆண்டு யூன் 2 ஆம் திகதி வெளியான பிரதான ஆங்கில நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தியின் அடிப்படையிலேயே தமது கட்டுரை அமைந்திருந்ததாக சண்டே ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

## அரசியல்...

உக்கிரமடைந்து வருகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் காத்திரமான நடவடிக்கைகளை ஐ.நா. முன்னெடுக்கவேண்டும். சமாதானம், நாடுகளுக்குடையிலான ஒற்றுமை ஆகியவற்றை கட்டிக்காக்க வேண்டியதே ஐ.நா.வின் பிரதான கொள்கையாகும்.

எனினும், ஐ.நா. தற்போது அரசியல் மயமாகியுள்ளது. பலஸ்தீன விவகாரத்தில் அதன் அணுகுமுறையும் அவ்வாறே அமைந்துள்ளது. மனித உரிமை விவகாரம்கூட அரசியல் ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது.

எனவே ஐ.நா.வின் முறைமை அரசியல் நோக்கம் கொண்டதா என்ற கேள்வி எழுகிறது. 30 வருடங்களாக தொடர்ந்த யுத்தம் முடிவடைந்த பின்பும் நாம் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றோம். எமக்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது என்று அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை...

ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு அரசாங்கம் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச சட்டங்களின் அடிப்படையிலேயே சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கடல் பாதுகாப்பு விதிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு படகும் சர்வதேச ஆட்கடத்தல்காரர்களை ஊக்குவிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிக்கும் எந்தவொரு நபருக்கும் நிரந்தர குடியுரிமை வழங்கப்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளர்கள்...

தகவல்கள் வெளியாகியிருந்தன.

கஞ்சா போதைப் பொருள் தம்வசம் வைத்திருந்தாக குற்றம் சுமத்தி 16 ஊடகவியலாளர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக சுதந்திர ஊடக இயக்கத்தின் இணைப்பாளர் சுனில் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டு என அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், எந்தவொரு ஊடகவியலாளரும் கைது செய்யப்பட்டிருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் பயணித்த வாகனத்தையும் அதன் சாரதியையும் பொலிஸார் பொறுப்பேற்று பின்னர் விடுவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பளை...

வருகைதந்து, மீண்டும் திரும்பிச்சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## இந்தியா...

குழுவினர் இந்தியாவுக்குள் பிரவேசிக்க விசா கோரியதாகவும் இந்தியா அதனை மறுத்ததாகவும் அண்மையில் செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே விசா கோரிக்கை விடுக்காத குறித்த குழுவினருக்கு இந்தியாவிற்கு செல்ல விசா வழங்குமாறு, தமிழக முதல்வர் உள்ளிட்ட தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி...

சந்திரிகா பண்டாரநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா உட்பட எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கான சகல தகுதிகளும் இருப்பதாகவும் எனவே, அவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது பொருத்தமானது எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவேட்பாளர் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இருந்தனர். எனினும் ஷிராணி பண்டாரநாயக்க எவ்வித அரசியல் பிரவேசமும் இன்றி பக்கச்சார்பற்ற வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்படுவது உசிதம் எனவும், அவரது பதவி நீக்கத்துக்குப் பிறகு இதுவரை அவர் எந்தவொரு அரசியல் கட்சியிலும் சேராமல் இருப்பது அவருக்குரிய சாதகமான நிலைமை எனவும் இந்தக் கூட்டத்தில் பலரும் கருத்துக்களை முன்வைத்தனர் எனவும் தெரிய வருகிறது.

## கொழும்பு சென்ற...

ஓமந்தையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அவர் தொடர்ந்து தெளிவுபடுத்துகையில்,

ஓமந்தை சோதனைச் சாவடியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்தே சோதனையில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் வானொன்றில் பெருந்தொகையான ஹெரோயின் கடத்தப்படுவதாக ஓமந்தையிலுள்ள இராணுவத்திற்கு அன்றைய தினம் இரவு 9.00 மணிக்கும் 9.15 இற்கும் இடைப்பட்ட நேரத்தில் தகவலொன்று கிடைத்துள்ளது.

பஸ்ஸில் வந்த ஒருவரினாலேயே இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இந்த தகவலையடுத்து விரைந்து செயற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் அந்த பஸ்ஸுக்கு பின்னால் வந்துகொண்டிருந்த சகல வாகனங்களையும் சோதனைக்கு உட்படுத்தினர்.

10 நிமிடங்களுக்கு பின்னர் வந்த வானொன்றை சோதனைசெய்தபோது அந்த வானில், சாரதி ஆசனத்திற்கு கீழிருந்த சிகரெட் பெட்டிக்குள் சிறிய தொகை கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதனையடுத்து வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கையை பொலிஸார் எடுத்துள்ளனர்.

ஏனைய ஏழு பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் விசாரணையின் போதே அவர்கள் ஊடகவியலாளர்கள் என்று தெரியவந்துள்ளது.

வானில் இருந்தவர்கள் ஊடகவியலாளர்கள் என்று தெரிந்துகொண்டு இராணுவத்தினர் இடையூறு விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது முற்றிலும் தவறானதாகும். பொலிஸாரின் விசாரணைக்கு இராணுவத்தினர் இலகுபடுத்திக் கொடுத்துள்ளனர்.

அந்த ஊடகவியலாளர் மற்றொரு வாகனத்தில் நேற்று அதிகாலையே கொழும்புக்கு திரும்பியுள்ளனர் என்றார்.

அந்த கஞ்சாவையை இராணுவத்தினரே போட்டுள்ளதாக ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனரே என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

பொலிஸாரே கஞ்சாவை மீட்டுள்ளனர். இராணுவத்தின் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளே முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை இராணுவம் முற்றாக மறுக்கின்றது என்றார்.

## கூட்டமைப்பு...

பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர்பை ஏற்படுத்தினோம்.

10.30 இல் இருந்து நள்ளிரவு 1.00 மணிவரை எம்மால் தொடர்பு கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவர்களது தொலைபேசிகள் எமது அழைப்ப ஏற்க மறுத்தன.

அந்தவகையில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கைத்தொலைபேசி மற்றும் நிலையான தொலைபேசி இரண்டிற்கும் 10.30 இல் இருந்து தொடர்பு எடுத்தபோதும் அதற்கு எந்தவித பதிலும் வரவில்லை.

தொலைபேசி அழைப்புக்களை அவர் ஏற்கவில்லை. அதன்பின் வவுனியா ஊடகவியலாளர், அவரது சகாக்களுக்கு தெரியப்படுத்தியிருந்தனர். அதன் பின்னும் எதுவும் நடக்கவில்லை.

இதனையடுத்து வவுனியா ஊடகவியலாளர்கள் இருவர் எம்.பி.யின் வீட்டு கதவை இரவு 11.00 மணியளவில் பலமுறை தட்டியும் எந்தப் பதிலும் இல்லை. அவரது தொலைபேசி அழைப்புச் சத்தங்களை மட்டுமே வெளியே கேட்க முடிந்தது.

அடுத்தது, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவரை தொடர்பு கொள்ள ஆள்மாறி ஆள்மாறி அழைப்பை ஏற்படுத்திய போதும் அவரும் பதில் இல்லை.

அதன்பின் அவரது சக நாடாளுமன்ற உறுப்பினர் வினோவிற்கு அழைப்பை ஏற்படுத்திய போது அவரது தொலைபேசி இலக்கம் செயலற்று இருந்தது.

பாருங்கள் எமது வன்னி நாடாளுமன்ற உறுப்பின்ர்களை, அவர்களது அறிக்கைகளையும் செய்திகளையும் மக்களுக்கு கொண்டு சென்று சமூகத்திற்காக உழைக்கும் ஊடகவியலாளருக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களின் நிலை என்ன?

இரவு 10.00 மணியில் இருந்து காலை 5.30 மணிவரை வவுனியாவிலே நின்று போராடிய ஊடகவியலாளருக்கு அதுவரை இந்த எம்.பி.மார் தொடர்பு எடுத்தார்களா? இல்லை. இவர்கள்தான் மக்கள் பிரதிநிதிகள்.

இது யாழ். ஊடகவியலாளருக்கோ அல்லது வவுனியா ஊடகவியலாளருக்கோ நடந்த பிரச்சினை இல்லை. எந்த ஊடகவியலாளருக்கு பிரச்சினை என்றாலும் இவர்கள் இதைத்தானே செய்வார்கள்.

மாகாணசபை உறுப்பினர்கள் சிலரை தொடர்பு கொண்ட போது, சிவமோகன் மட்டும் ஓமந்தைப் பொலிஸ் நிலையம் வந்து எமக்காக சில வார்த்தைகள் கதைத்து எம்முடன் சில மணிநேரம் நின்றார். மற்றவர்கள் எவரும் உதவவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (70)

# அதிகார வரம்பை மீறிய வகையில் செயற்படுகிறது அமெ. தூதரகம்

## இராணுவம் குற்றச்சாட்டு



(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தனது அதிகார வரம்பிற்கு அப்பால் சென்று செயற்படுவதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

காணமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளிப்பவர்கள் இலங்கைப் படையினரால் அச்சுறுத்தப்படுவதாக அமெரிக்க தூதரகம் வெளியிட்ட குற்றச்சாட்டையும் இலங்கை இராணுவம் மறுத்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை. புலம்பெயர்ந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஊடகங்கள் வெளியிடும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டே அமெரிக்க தூதரகத்தின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இது அடிப்படையற்றது என்றும் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நம்பகமான தகவல்கள் கிடைத்தால் அமெரிக்கத தூதரகம் தமது அதிகாரத்துக்கு உட்பட்ட வகையில் இலங்கை அரசாங்கத்துக்கு முறையிடலாம்.

இதனைவிடுத்து ஊடகங்களுக்கு அறிக்கைகளை வெளியிடுவது அதன் அதிகார வரம்பு மீறிய செயற்பாடு என்று வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

# முல்லைத்தீவில் வெடிப்புச் சம்பவம்



முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வெடிச் சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விடுதிகளுக்கு அருகே குப்பை கூழங்கள் எரிக்கப்பட்டபோது இந்த வெடிச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வெடிச்சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. குப்பைக்குள் அல்லது நிலத்தின் கீழ் இருந்த ஏதேனும் வெடிபொருள வெடித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் பொலிஸாரின் ஜீப் ஒன்றின் கண்ணாடிகள் சேதமானதுடன் விடுதிக்கும் சிறு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(25)

# அடுத்தடுத்து இலங்கை வரும் ஜப்பான், சீனத் தலைவர்கள்

தென்சீனக் கடல் சர்ச்சை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில், ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படும், சீனா, மற்றும் ஜப்பானியத் தலைவர்கள் வரும் செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு அடுத்தடுத்து பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபே எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி தொடக்கம், 8 ஆம் திகதி வரை இலங்கை மற்றும் பங்களாதேஷுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, இலங்கையுடன் கடல்சார் பயணப் பாதையின் பாதுகாப்புத் தொடர்பாக இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் பிரச்சினைகள் நிலவி வரும் சூழலில், சீனாவின் அதிகளவு உதவிகளைப் பெற்றுள்ள நாடுகளான இலங்கை மற்றும் பங்களாதேஷுடன் நெருக்கத்தை அதிகமாக்கிக் கொள்ளும் நோக்கிலேயே ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபே இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

அதேவேளை செப்ரெம்பர் 9 ஆம் திகதி மூன்று நாள் பயணமாக சீன ஜனாதிபதி கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

1986 ஆம் ஆண்டுக்குப் பின்னர், சீன ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

இந்தப் பயணத்தின் போது, இலங்கையுடன் நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ளும் நோக்கில், சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் கையெழுத்திடுவார் என்று எதிர்பார்க்கப்படும் அதேவேளை, சீனாவின் கடல் சார் பட்டுப்பாதை திட்டத்தில் இலங்கையின் பங்களிப்பையும் உறுதிப்படுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஊடகவியல் கல்வியைக் கற்கும் உரிமை தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மறுப்பு

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விசனம்

ஊடகவியல் கல்வியை கற்பதற்கான உரிமை தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மறுக்கப்படுவதாக இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. 'றைற்ஸ் நொவ்' என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்ற ஊடக கற்கைநெறி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான பயிற்சிப்பட்டறை அல்ல என்று ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர் அ. நிக்ஸன் தெரிவித்தார்.

கொழும்பு இதழியல் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

டிஜிற்றல் ஜேர்னலிசம் என்ற ஊடக பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஊடகவியலாளர்கள் குழு ஒன்றை ஓமந்தை சோதனைச் சாவடியில் நிறுத்தி சோதனையிட்டதுடன் அவர்களை கைது செய்து தடுத்து வைத்திருந்தமைக்கு கண்டனம் தெரிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நிக்ஸன் விளக்கமளித்தார்.

திட்டமிடப்பட்ட முறையில் ஊடகவியலாளர்கள் பயணம் செய்த வாகனத்திற்குள் கஞ்சா பெட்டி ஒன்றை வைத்து விட்டு அதனை ஊடகவியலாளர்கள் கடத்தியதாக படையினர் குற்றம் சுமத்தியுள்ளனர். ஊடகவிலாளர்களை கைது செய்யும் நோக்கிலும் குறித்த பாடநெறியில் அவர்கள் பங்குகொள்வதை தடுக்கும் வகையிலும் படையினர் இவ்வாறு செயற்பட்டதாக அவர் குற்றம் சுமத்தினார்.

ஊட்கவியலாளர்கள் துணிச்சலாக செயற்பட்டு படையினருடன் வாக்குவாதப்பட்டனர். உண்மையை எடுத்துக் கூறினர். நள்ளிரவு என்றும் பாராமல் ஊடகவியலாளர்கள் வீதியில் அமர்ந்திருந்து நடத்திய போராட்டத்தினால் படையினர் அவர்களை விடுதலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும் தொலைபேசி மூலமாக ஊடகவியலாளர்கள் சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கபடுகின்றது. அதேவேளை அவர்கள் பயணம் செய்த சாரதி தொடர்ந்தும் தடுத்து வைகககப்பட்டுள்ளார்.

இது தமிழ் ஊடகவியலாளர்களுக்கு படையினரால் தொடர்ந்தும் விடுக்கப்படும் அச்சுறுத்தல் நடவடிக்கை என்று கூறிய நிக்ஸன் அரசாங்கத்தை பதவி கவிழ்க்கும் நோக்கம் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இல்லை எனவும் குறிப்பிட்டார். ஊடகத் தொழிலை உரிய தொழிற் தகுதியுடன் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடத்தப்படும் பயிற்சி நெறிகளை குழப்பும் செயற்பாடுகளில் [illegible] பட வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளித்த சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளர் சுனில் ஜயசேகர அரசாங்கம் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக திட்டமிட்ட முறையில் செயற்படுவதாக குற்றம் சுமத்தினார்.

கஞ்சாவை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கடத்த வேண்டிய ஒரு தேவை தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இல்லை என்றும் கூறிய அவர் ஊடக சுதந்திரத்தில் படையினர் தலையிடுவதாகவும் குறிப்பிட்டார்.

# சர்வதேச பாடசாலைகளில் கட்டாயத் தாய்மொழிக் கல்வி

இலங்கை மாணவர்கள் கல்வி கற்கும் சர்வதேச பாடசாலைகளில் அடுத்த வருடம் முதல் கட்டாய தாய்மொழிக் கல்வி கற்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதேபோல் சர்வதேச பாடசாலைகளில் இதிகாசங்கள் மற்றும் அவரவர் சமய விடயங்கள் தொடர்பிலும் கற்பிக்கப்படும் எனவும், இது தொடர்பிலான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கிருமிநாசினி இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர தொகை அதிகரிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் கிருமிநாசினிப் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் கிருமிநாசினிக்கான இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான தொகை அதிகரிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த அனுமதிப்பத்திரத்திற்கான தொகை 8000 ரூபாவிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவாக் அதிகரிக்கப்படவுள்ளது.

அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுத்த பின்னர் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கிருமிநாசினி இறக்குமதி செய்யும் போது 1000 ரூபா செலுத்தி கிருமிநாசினி பதிவு காரியாலயத்தில் விசேட அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளவேண்டும்.

இச்செயல்முறை அடுத்த ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ளது. இதுதவிர கிருமிநாசினிப் பாவனை தொடர்பில் மாவட்ட - வலய மட்டத்தில் தகவல் முறையொன்று அமைக்கப்படவுள்ளது என்றும் அதுவும் அடுத்த ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் ஆரோக்கியம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பனவற்றைக் கருத்திற் கொண்டு அமைச்சு மேற்கூறப்பட்ட விடயங்களை அமுல்படுத்த தீர்மானித்துள்ளது.

2020 ஆம் ஆண்டளவில் கிருமிநாசினி பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த விடயங்களை அமைச்சு அமுல்படுத்தியுள்ளது.

# கருங்குளவிகள் கொட்டியதில் பளையில் ஒன்பது பேர்காயம்

பளை, அரசர்கேணி பெரியதம்பிரான் ஆலயத்தில் நேற்றைய தினம் ஆடி அமாவாசை பொங்கலில் ஈடுபட்ட அடியார்களை கூலைத்துவந்த கருங்குளவிகள் துரத்தித் துரத்தித் தாக்கியதில் 9பேர் படுகாயமடைந்தனர். தக்குதலுக்கு இலக்கான ஒன்பது பேரும் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட அனைவரும் பளை அரசர்கேணிப் ப்குதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. இரத்தினசிங்கம் இராஜேஸ்வரி (வயது 59), கனகு செல்லம்மா (வயது 70) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் - மார்க்கண்டு அன்னலட்சுமி (வயது 60), ஆறுமுகம் செல்வராசா (60), சுதர்சன் பிரியந்தினி (வயது 33), சால்டன் கவிநயா (வயது 3), யோகலிங்கம் கனகாம்பிகை (வயது 43), சுனில் ரோகினி (வயது 13) பாஸ்கரன் பிரியங்கா (வயது 15) ஆகியோர் பளை வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

ஆலயத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் உள்ள வேப்பமரத்தில் பெரிய கருங்குளவிக் கூடு காணப்படுவதாகவும் ஆலயத்தில் இடம்பெற்ற பொங்கலின்போது எழுந்த புகையினால் கருங்குளவிகள் கலைந்து வந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யுலை 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.